Registered as a News Paper
பக்கம் – 16

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

விலை: 12.00

நாதம் -13 திருவள்ளுவர் ஆண்டு 2034 14 - 20 பெப்ரவரி 2003 ஓசை 361

## புலிகளின் பொறுமையில் தப்பிய சமாதானம்

### இராணுவத்தின் வன்முறையிலிருந்து தப்புமா?



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 14 .02.2003

# சமாதானத்தை எச்சரிக்கும் சம்பவங்கள் வேண்டும் தீர்க்கமான நடவடிக்கைகள்

மழை விட்டும் தூவானம் நிற்க வில்லை என்பார்கள். மழை விட்டு சூறா வளி வந்ததாக யாரும் சொல்லவில்லையே. ஆனால் இங்கு நடந்திருக்கிறது.

நெடுந்தீவில் நிகழ்ந்த கடற்படை யினரின் வன்முறைத் தாண்டவத்தினால் மூன்று போராளிகள் உயிர்ப்பலியா கியிருந்தார்கள்.

இந்த அதிர்ச்சியூட்டும் சம்பவம் நிகழ்ந்த துயரத்திலிருந்தும் திகைப்பி லிருந்தும் தமிழ் மக்கள் விடுபடமுன், கொதிப்படைந்த புலிகள் மிகக்கடுமையான சகிப்புணர்வோடு சமாதானமடையமுன் மானிப்பாயில் பெண்போராளிகள் மீது காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டதான சம்பவம் நிகழ்ந்தேறியிருக்கிறது.

மட்டுமல்ல கொதிப்படைந்த மக்கள் தடுக்கவும் எதிர்க்கவும் முற்பட்டபோது பொதுமக்கள் மீது அதே காடைத்தனத்தைப் பிரயோகிப்பதற்கு படைத்தரப்பு பின்நிற்க வில்லை.

ஊடகவியலாளர்கள் அதனை ஒளிப்படம் எடுக்க முற்பட்ட போது அவர்களும் அதே காடைத்தனத்துடன் தாக்கப்பட்டார்கள்.

இதில் துயரம் என்னவென்றால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பின்நடந்த சம்பவத்தில் நின்றிருந்தபோதும் அவர்கள் கையாலாகாதவர்களாக நிற்க வேண்டிய நிர்ப்பந்தசூழலே அங்கு நிலவுவ தாயிற்று.

போர்நிறுத்தத்தையும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் சாராம்சங்களையும் அதனை அடுத்து நடைபெற்றுவரும் சமா தான நகர்வுகளையும் சிறிலங்காவின் ஆயுதப்படைகள் ஏற்றுக் கொள்ளவில்லை அவற்றுடன் உடன்படத் தயாராகவுமில்லை என்பதையே இச்சம்பவங்கள் வன்மையாக உணர்த்தியுள்ளது.

ஏற்கனவே உயர்பாதுகாப்பு வல யத்தில் மக்களின் மீள்குடியேற்றம் தொடர் பாக இராணுவம் கொண்டுள்ள நிலைப்பாடு மக்களின் இயல்பு வாழ்க்கையை நிராகரிப் பதாக அமைந்துள்ளது.

குடாநாட்டின் மீது வேவு விமானங் களூடான கண்காணிப்பு நடவடிக்கைகள் மக்களை அச்சுறுத்தல் செய்து வருகின்றன.

மேலும் கிழக்கில் அதிரடிப்படை யினரின் நடவடிக்கைகள் தமிழ் மக்களை அவம தித்தும் அச்சுறுத்தியும் வருகின்றன.

பழைய முகாம்களை விட்டு நீங்குவ தாக அறிக்கைகளை விடும் இராணுவத் தரப்பினர் புதிய பாரிய முகாம்களை அமைக்கும் பணி களைத் தீவிரப்படுத்தியும் வருகின்றனர்.

இதற்கென அப்பகுதி வாழ் மக்களை மிரட்டி வெளியேற்றி வருவதாகவும் செய்தி கள் வருகின்றன.

திருடவந்த படையினரை பிடித்தமைக் காக பொதுமக்கள் சிலரை குடத்தனைக் குச் செல்ல-அதாவது தங்கள் வீடுக ளுக்குச் செல்ல இராணுவம் தடை விதித் துள்ளது.

அரசமரம் தென்படும் இடங்களில் எல் லாம் விகாரைகள் அமைக்கப் படைத் தரப்பு முயல்கின்றது. புன்னாலைக் கட்டுவனில் அரசமரத்தடியின் கீழ் திடீரென இராணுவத் தினர் வைத்த புத்தர் படத்தால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதிகளில் வீடுவீடாக நுழையும் படையினர் பெற்றோர்களிடம் உங்கள் பிள்ளைகள் யாரும் இயக்கத்தில் உள்ளார்களா எனத்துருவித் துருவிக்கேட்டு மிரட்டுகிறார்கள்.

கல்வயல் பகுதியில் 10 ஏக்கர் நிலப் பரப்பில் பாரியபடைமுகாம் ஒன்றை அமைக்கப் படையினர் திட்டமிட்டு வருவ தாகவும் இதன் காரணமாக அப்பகுதி மக் கள் மீண்டும் இடம்பெயர வேண்டிய அச்சத் தில் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன.

இப்படியாக,படைத்தரப்பினர் சமா தானத்திற்கும் புரிந்துணர்வு உடன்பாட் டிற்கும் எதிரான நடவடிக்கைகளை இர கசியமாகவும் பகிரங்கமாகவும் மேற் கொண்டு வருவது அமைதி குறித்த, சமா தானம் குறித்த மக்களின் எதிர்பார்ப்புகளை சிதைத்து வருகின்றமை கண்கூடு.

நெடுந்தீவுக் கடற்சம்பவத்திற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அணுகு முறைக்கோளாறும் காரணம் என்றும் கூறப்படுகிறது.

சிறிலங்காப் படைகளின் சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகள் பகிரங்கமான வையே. கடந்த காலங்களில், புரிந்துணர்வு உடன் படிக்கையின் பின்னர்-கடற்படை விடுதலைப்புலிகளுடன் வேண்டுமென்றே வலிந்து மோதும் செயற்பாடுகளிலேயே தீவிரமாக இருந்து வந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் பொறுமையைச் சீண்டும் இத்தகைய நடவடிக்கைகள் கண் காணிப்புக் குழுவினர்க்கும் தெரியா ததல்ல....

ஆனாலும் ஒவ்வொரு சம்பவத்தின் பின்னும் கண்காணிப்புக்குழு தீர்க்கமான கண்டனங்களையோ அணுகுமுறை களையோ வெளிக்கொணரத் தவறியமை இன்று மானிப்பாய் சம்பவத்திற்கான ஊக் கியாக மாறிவிட்டிருக்கிறது.

'நெடுந்தீவுச் சம்பவம் தீவிரமானது' என்று கூறிய அமைச்சர் பீரிஸ், அதற்கான காரணத்தை விளக்கவில்லை. அதற்கு யார் பொறுப்பு எனக் கூறவில்லை .இப்படியான சம்பவம் நடப்பது இது முதல் முறையல்ல என்றும் அவர் சமாளித்துள்ளார்.

இது தங்கள்பக்கக் குற்றங்களை சமா ளித்து மறைக்கும் ஒரு தந்திரமேயாகும்.

இத்தகைய தந்திரங்கள் சமாதானத்தின் தடைகளைத் தாண்ட தொடர்ந்து உதவப் போவதில்லை. சரியாகச் சொன்னால் இத்தகைய தந்திரமே படைத்தரப்பிற்கான காப்பு வடிவமாகி தூண்டலை அளித் துவருகிறது.

படைத்தரப்பினர் ஒத்துழைக்காவிடில் சமாதானம் சாத்தியமில்லை என்பதை விளக்கவேண்டிய அவசியமேயில்லை.

ஆனால் படைத்தரப்பைக் கட்டுப்படுத்தும் வலு அரசாங்கத்திடம் மட்டும் இல்லை. முப்படைத் தளபதியாகவும், முடிவெடுக்கும் சக்தியா கவும் சனாதிபதியும் உள்ளார்.அவர் சமாதான நகர்வுகளை நிராகரிப்பவராகவும் இருந்துவருகிறார்.

ஆனால் மக்கள் சமாதானத்தின் மீது அடைந்துவரும் நம்பிக்கையீனத்தை, தோன்றும் பதட்டநிலையை , இத்தகைய விசனமூட்டும் சம்பவங்களால் புலிகள் அடையும் கொதிப்பைத் தடுப்பதற்கு இத்த கைய காரணங்கள் உதவப்போவதில்லை.

இவற்றிற்கு தீர்க்கமான முடிவுகளைக் கொண்ட அணுகுமுறைகளை அரசாங்கமும் மூன்றாம்தரப்பும் எடுக்காதுவிடில் சமா தானம் தொடர்ந்தும் தாக்கப்படும். அத்தகைய தாக்குதல்களிலிருந்து சமா தானம் தொடர்ந்தும்தப்பிப் பிழைக்கும் என்று நம்புவதற்கு எந்தஅனுகூலமும் இல்லை.

## நெடுந்தீவு, மானிப்பாய்ச் சம்பவம்

யுத்தநிறுத்தத்தின மீதான சமாதானம் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. சமாதானத்தின் மீதுதான் தீர்வு கட்டப்படவேண்டியிருக்கிறது.

ஆயின் சமாதானத்தின் அத்திவாரம் யுத்தநிறுத்தத்திற்கான ஒப்பந்தமே.

இது ஈடாடும் போதெல்லாம் சமாதானமும் ஈடாடிப்போகும் என்பதை யாரும் விளங்கிவிடத் தவறக்கூடாது.

யுத்தத்திற்கான வன்மம் இராணுவத் தினரிடமிருந்து அகன்று போகவில்லை. சமா தானத்திற்கு தெற்குத் தயாராகும்போது ஊட்டபட்ட யுத்த வன்மத்தை இராணுவத்தி டமிருந்து தணிப் பதற்கும் ஒரு நிகழ்ச்சிநிரல் தேவை என்பதை தெற்கு உணரத்தவறிவிட்ட தாகவே தெரிகிறது. அதற்கான நடவடிக் கைகள் எதிலும் அரசாங்கம் இறங்கியிருக் கவில்லை.

இதன் விளைவால் சமாதானத்திற் கெதிரான வன்மம் இராணுவகூடாரத் திற்குள் கொதிநிலையில் இருக்கிறது. இதனை உணர்ந்துகொள்ள பல சம்பவ வெளிப்பாடுகள் ஒப்பந்தகாலந்தொட்டு ஆங்காங்கே நிகழ்ந்தேறின.

ஆனால் அவற்றைத்தடுப்பதற்கான திட்டவட்டமான முடிவுகளோ மார்க்கங்களோ நிறைவேற்றப்படாதவிடத்தில் அவை திரட்சியான வெளிப்பாட்டை காட்டத் தொடங்கியுள்ளன.

நெடுந்தீவில் நிகழ்ந்தசம்பவம் இத்த கையதொன்றே. இதற்குப் பின்னரும் கூட தெற்கு இவ்விடயத்தில் சுதாகரித்துக் கொண் டதாகத் தெரியவில்லை.

விளைவு மானிப்பாயில் வன்மம் வலுவாக வெடித்திருக்கிறது.

நெடுந்தீவுச் சம்பவம் யுத்தநிறுத்தத்திற்கு ஏற்பட்ட ஒரு தத்து. அந்தத்தத்தைக் கடப்ப தற்கு மூன்று உயிர்கள் தம்மைத் தற்கொடை செய்ய வேண்டியிருந்தது. இந்தத் தற்கொடை சமாதானத்தின் ஒருதரப்பான புலிகளிடமிருந்து நிகழ்ந்தது. தத்தோ சமாதானத்தின் மறு தரப்பிடமிருந்து உருவானது.

படகில் இருந்த புலிகளை கைதுசெய்ய முற்படுவது என்பதும் யுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக தொடக்க முற்படுவது என்பதும் பிரக்ஞை வடிவில் ஒன்றுதான்.

ஏனெனில், யுத்தக் கைதியாக ஆகத் தயாரில்லாத கொள்கையே போராளிகளை கழுத்தில் சைனட் வில்லைகளை அணிய வைத்திருக்கிறது.

எனின் சமாதானத்தில் கைதியாக ஆகுவதென்பது உணர்வு நிலையில் இய லாததே.

கைதைத் தடுப்பதற்கு அவர்கள் திருப்பித் தாக்கியிருக்க முடியும். அந்த ஆயுதங்களின் இருப்பு தற்செயலா னவையே. பழுதடைந்த படகை கட்டியிழுப்பதற்காக கடல் எல்லைக் காப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படகின் வரவால் வந்தவையே. இதுபற்றி ஏற்கனவே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விளக்க மளித்திருந்தார்.

ஆனால் இங்கு தேவையானது புலிப் போராளிகள் அவற்றைப் பிரயோகிக்க தமக்கேற்பட்ட நெருக்கடி நிலையிலும் முற்ப டவில்லை என்பதுடன் யுத்தநிறுத்தத்தைப் பாதுகாக்க தற்கொலை செய்து கொண்டார் கள் என்பதுமே .

உணர்வு நிலையில் இது ஒரு மனதை நெருடும் கடினமான சம்பவமே.

இப்படிப் பார்க்கையில் ஒருதலையான வன்முறையிலிருந்து ஒரு தலையான உயிர்த்தற்கொடையால் புலிகள் சமாதா னத்தைக் காத்துள்ளனர்.

ஆனால் உடனடியான கண் காணிப்புக்குழு மற்றும் அரசதரப்பின் வெளிப் பாடுகள் மக்களுக்கு சினமூட்டு பவையாகவே இருந்தன.

இது நிகழ்ந்து ஒரு வாரத்திற்குள் மானிப்பாயில் படைத்தரப்பின் வன்மம் மிருகத்தனமாக வெளிப்படுத்தப்பட்டிருகிறது.

உணர்வுநிலையில் இது மிகவும் கொடூரமானது. இராணுவம் நிராயுதமான புலிகளைத் தாக்கியது. அதுவும் பெண் போராளிகளை. ஒவ்வொரு பெண் போராளி யையும் பலர் ஆயுதங்களுடன் சூழ்ந்து இடுப புப் பட்டியைப் பல வந்தமாகக் கழட்டி சப்பாத்துக் கால்களாலும் ஆயுதங்களாலும் வீதியில் வீழ்த்தித் தாக்கியிருக்கிறது.

கொதிப்படைந்து மக்கள் தடுக்க முற்பட்டபோது, எதிர்க்க முற்பட்டபோது மேலும் படைகளை வரவழைத்து ஈவிரக்க மின்றி மக்களையும் படைத்தரப்புத் தாக்கி யிருக்கிறது.

இவற்றை ஒரு இராணுவத்தினரின் அத்து மீறல் என்று விளக்கமளிப்பதும் விளங்கிக் கொள்வதும் அபத்தமானது.

இது ஒரு இராணுவ வன்முறை. கொதி நிலையில் உள்ள யுத்தவன்மத்தின் திரட்சி யான வெளிப்பாடு.

இதன்பின்னால் சனாதிபதி என்ற அரசியல் சக்தி இருக்கலாம். ஆயினும் அதுவும் யுத்த வன்மத்தின் வெளிப்பாடே.


ஆனால் இந்தத் திரட்சிக்கு அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும். இதில் கையாலா காத்தனமே அரசாங்கத்திடம் உண்டு என் றால் சமாதானத்திற்கும் அதன் கையா லாகாத்தனமே வெளிப்படும்.

மட்டக்களப்பில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது மக்களைத் தாக்கி இராணு வம் கொன்றது. பின் திருகோணமலையிலும் இதுவே நடந்தது. அதன்பின் வடமராட் சியிலும் இது நிகழ்ந்தது.

உதிரிஉதிரியாக இவற்றிற் கிடையிலும் தொடர்ந்தும் பல சம்பவங்கள் நிகழ்ந்தன.

இவற்றைக் கையாள்வதற்கு உறுதியான நிழ்ச்சிநிரலை அரசாங்கம் வகுத்திருக் கவில்லை .மாறாக தெற்கில் கட்டாய இராணுவ சேவை போன்ற

(15ம் பக்கம் பார்க்க...)




# சிங்கள மக்களிடம் செயலையும் தமிழ் மக்களிடம் விழிப்பையும் கோருகிறது

# வடக்கும் கிழக்கும் இலவுகாக்கின்றனவா?

**இ. விவேகானந்தன்**

“**தற்போது** நாட்டில் சமாதானம் நிலவுவதால் வடக்கிலிருந்து எமது பிள்ளைகளின் உடல்கள் வருவதில்லை. மாறாக தாம் பணியாற்றும் பகுதிகளிலிருந்து உயிருடன் அவர்கள் வீடுகளுக்கு வருகிறார்கள். மக்கள் யுத்த பீதியின்றி வாழ்கிறார்கள்.” இவ்வாறானதொரு செய்தியைச் சொல்லக்கேட்டவர் யப்பான் அரசின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு விஜயம் செய்த திரு. யசூசி அகாசி அவர்கள். சொன்னவர் அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர். இந்தச் செய்தியை வெளியிட்டது அல்லது குறிப்பிட்டது அரசின் தமிழ் ஏடான தினகரனின் ஆசிரியர் தலையங்கம்.

அத்தோடு யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சுக்கள். தொடர்வதால் சிறிலங்காவின் பொருண்மியக் கட்டமைப்புப் புதுப்பிக்கப்பட்டுப் பொலிவுறுவதாகவும் பலமடைவதாகவும் சிறிலங்காவின் பொருண்மியம் மேம்பாடடைய வேண்டுமாயின் யுத்தம் நிறுத்தப்பட்டுச் சமாதானம் எட்டப்படுவது அவசியம் எனவும் அரசாங்கத்தின் முக்கிய நபர்களான ரணில், பீரிஸ், மொறகொட ஆகியோர் நாட்டின் உள்ளேயும் வெளியேயும் பல்வேறு கோணங்களில் தத்தமக்குரிய இராஜதந்திர, சட்ட, பொருண்மிய வார்த்தைகளில் அழுத்தி உரைக்கின்றனர்.

இவர்கள் குறிப்பிடுவதைப் போன்றே சிறிலங்காவின் பங்குச் சந்தையில் வளர்ச்சிப் போக்கு காணப்படுவதோடு வெளிநாட்டு முதலீடுகள், வெளிநாட்டு உதவிகள் என்பன உள்வரவும் தொடங்கிபுள்ளன. கலை நிகழ்வுகள், இசைக்கச்சேரிகள், வீதியோர விற்பனை நிலையங்கள், உறங்காத கொழும்பு நகரம் களியாட்டங்கள் என வியாபாரப் பொழுதுபோக்கு அம்சங்கள் தென்னிலங்கையை குறிப்பாகப் பெருநகரங்களை ஆக்கிரமித்து நிற்கின்றன.

இவை அனைத்தும் நல்ல விடயங்களே. இதற்காக சமாதானத்துக்கான நகர்வுகளையும், அதனை முன்னெடுப்பவர்களையும் நாம் பாராட்டத்தான் வேண்டும். ஆனால் இலங்கையின் வட - கிழக்குப் பகுதிகளின் நிலை என்ன? என்பதையும் இங்கே மறுதட்டிலிட்டுப்பார்க்கும் போதுதான் இந்தப் பளபளப்புக்களின் கலகலப்புக்களின் சாயம் வெளுத்துப் போகிறது. ஒருவருடத்தினை நிறைவு செய்யப்போகும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னான முன்னேற்றம் என்பது வட - கிழக்குப் பகுதிகளில் எவ்வாறுள்ளது?


உங்களின் முகம் மாறுகிறதல்லவா? மனங்களில் சுருக்கம் விழுகிறதல்லவா? இதுதான் இன்றைய பிரச்சினை. மூன்று தசாப்தங்களாக இனப்பிரச்சினைக்குள் சிக்கி யுத்தத்துக்கு நேரடியாக முகம்கொடுத்துச் சின்னாபின்னமாகிப் போயுள்ள வட - கிழக்கு மக்களின் அன்றாட வாழ்வியல் மேம்பாடடைந்துள்ளதா? இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதா?

இந்தக்கேள்விகளுக்கான பதில் சற்று ஆழமானது. பலதளங்களில் பார்க்கப்படவேண்டியது. அலசப்படவேண்டியது.

வட - கிழக்குப் பகுதிகளில் யுத்தம் நடைபெற்றகாலத்துக்கும் தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்துக்கும் இடையில் என்ன வேறுபாடு காணப்படுகிறது? பொருளாதாரத்தடை, பாதைத்தடை, இரவுநேர ஊரடங்குச்சட்டம், வீதிச்சோதனைகள், கைதுகள் என்பன இல்லை. நுகர்வுப் பொருட்கள் எமது வீடுகளுக்கு அண்மையாகவுள்ள பெட்டிக் கடைகளுக்கே வந்து சேருகின்றன. தெலைபேசி, செல்லிடப்பேசி, சில தொலைக் காட்சிச்சனல்கள் எமது பகுதிகளுக்கும் தலைகாட்டியுள்ளன. வட-கிழக்கின் விவசாய, கடல் உற்பத்திகள் தென்பகுதிக்குப் போகின்றன. இவ்வளவு காலமும் வராதிருந்த திணைக்கள அமைச்சுக்களின் உயரதிகாரிகளும், இராஜதந்திர வட்டாரங்களும் அடிக்கடி விஜயம் செய்கிறார்கள், பார்வையிடுகிறார்கள், பேசுகிறார்கள், பத்திரிகையாளர்களுக்குக் கவர்ச்சியான பேட்டியளிக்கிறார்கள். அவற்றை உலகமெங்குமிருந்து பார்ப்பவர்கள், கேட்பவர்கள் வாய்பிளந்து நிற்கிறார்கள் அவ்வளவுதான்...

உலகவங்கியின் அதிகாரி ஒருவர் கடந்த வாரம் யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு நான் மேற்கூறியவைகளின் பச்சையான சாரத்தைச் சொன்னார். “நாம் ஏதாவது செய்தாக வேண்டும். நாங்கள் பேசிக் கொண்டே இருக்கிறோம். அதிலிருந்து நாம் செயற்படத்தொடங்க வேண்டும்” இதுதான் அவரது கூற்று.

இதையே தலைவர் அவர்கள், தமது கடந்த வருட மாவீரர் தின உரையில் மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். “தமிழர் பூமியில் அமைதிநிலை ஏற்பட்டுள்ளது. இயல்புநிலை ஏற்படவில்லை” அதாவது புரிந்துணர்வு உடன்படிக்கை தமிழர்பிரதேசத்தில்அமைதியைத் தந்துள்ளது. இயல்புச் சூழலைத் தோற்றுவிக்கவில்லை. இதனை அவர் தெரிவித்து இரண்டு மாதங்களாகி விட்டன. ஆனாலும் நிலமை அவ்வாறேதான் இருக்கிறது.



உயர்பாதுகாப்பு வலயங்கள் விழுங்கியுள்ள பகுதிகளில் மக்கள் தொடர்ந்தும் அகதிகளாகவே அலைகிறார்கள். பயிர்ச் செய்கை நிலங்கள் தரிசாக, சூனியமாகக் கிடக்கின்றன. கிழக்கு மாகாணத்தில் பகலிலே திறந்திருக்கும் பல வீதிகள் மாலை 6 மணியானதும் மூடிக் கொள்வதுடன் சிவப்புநிற விளக்குகளையும் எரியவிடுகின்றன. உதாரணமாக வாழைச்சேனைக்கும் புணானைக்குமிடையிலான பகுதியில் நாவலடிச்சந்தி முதல் புணானை புகையிரத நிலையம் வரையான 8மைல் தூரத்தில் ஐந்து இடங்களில் வீதியின் குறுக்கே முகாமைத்திருக்கும் இராணுவம் வீதியைத் திறந்து விடத் தயாராயில்லை. இவை மக்களுக்குச் ‘சமாதானப்பரிசாகத்’ திறந்துவிடப்படுமென இராணுவ உயரதிகாரி ஒருவர் நான்கு மாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். ஆனால் அது இன்னமும் நிறை வேறவில்லை.

அவ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக உப வீதிகள் அண்மைய மழையினால் அரிக்கப்பட்டுக் குண்டும் குழியுமாகக் கிடக்க, வாகனங்கள் விழுந்தும் எழுந்தும் பயனிக்கின்றன. இராணுவ வாகனங்கள் மட்டும் பெருந்தெருவில் நேரே போகின்றன.

புணானைப் புகையிரத நிலையத்தில் முகாமிட்டுள்ள படையினர் அதனை விட்டு வெளியேறவில்லை, ஆனால் புகையிரதம் அங்கு தரித்துச் செல்கிறது, படையினரின் பயணத்துக்காக இங்கிருந்து படையினர் வெளியேறாததால் ‘ரிதிதென்ன’ என்ற முஸ்லிம் குடியேற்றக்கிராமத்தில் புதிய புகையிரத நிலையம் ஒன்று மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.கட்சி பிரமுகரும்(தலைமை வேட்பாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகருமான அலிசாஹிர் மௌலானாவின் ஆலோசனைக்கமைய அமைக்கப்படவுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கமைய அகற்றப்பட்ட வேகத் தடைகள் முழுவதுமாக அகற்றப்படாமல் வீதியின் ஒரு ஓரத்தில் இரண்டு, மூன்று அடிகளுக்கு அப்படியே விடப்பட்டுள்ளன.

அதாவது 2002 பெப்ரவரி 23ம் திகதிக்கு உடன் தொடர்ந்த சில நாட்களில் ஏற்பட்ட மாற்றங்கள் தவிர ஏனைய எதுவித நகர்வுகளும் வட- கிழக்கில் ஏற்படுத்தப்படவில்லை என்பதே பச்சையான உண்மை. இதற்கு சனாதிபதி, நிறைவேற்றதிகாரம் படையினரின் கடும்போக்கு, இராணுவ நலன், பாதுகாப்பு நடவடிக்கைகள் எனப் பலவித விளக்கங்க[illegible]ன் வைக்கப்பட்ட போதும் த[illegible]க்களின் இயல்பு வாழ்க்கை எ[illegible] இயல்பாக்கப்படவில்லை. இ[illegible] பாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் வெறும் பம்மாத்தாகவே உள்ளன.

பேசுதல், குழுக்கள் நியமித்தல், காலக்கெடுக்கள் விதித்தல், திட்டங்களை அடையாளங்கானல், தீர்வுகளை முன்வைத்தல் என்று வார்த்தை ஜாலங்களாகவும், எழுத்து வேலைகளாகவும் (Paperworks) மட்டுமே இன்று வரை உள்ளனவே தவிர உருப்படியான தீர்வுகள் எவையும் காணக்கிடைக்கவில்லை. ஆனால் பேச்சுவார்த்தைகள் வெகு கவர்ச்சியாக தலைநகரங்கள் தோறும் நடந்தேறுகின்றன. ஊடகக்காரர்கள் அவற்றைக் காட்டிக் காசு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்பாவித் தமிழ் மக்கள் இன்னும் விடிவுக்காகக் காத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். ■




**செய்தி:“அரசு புலிகளுக்கிடையில் ஏற்படும் இறுதித் தீர்வு மக்கள் முன்வைக்கப்படும்” - அமைச்சர் திசாநாயக்க தெரிவிப்பு...**

மயிலர்:‘அரிவரி’யே இன்னும் சரியாத் தாண்டேல்லை. அதுக் குள்ளை பட்டப்படிப்பு முடிந்த பின் என்ன செய்யிறதெண்டெல்லே அமைச்சர் ஆருடம் சொல்லுறார்.. அதுசரி அமைச்சர் கூறும் இறுதித்தீர்வு என்ன எண்டதையும் அவர் சொல்லியிருந்தால் நல்லாயிருந்திருக்கும்... ஆனால் அது அவருக்கே தெரியாத விசயம் எண்டது எங்களுக்கு தெரியாதண்டெல்லே பூச்சாண்டி காட்டுகிறார். எதிர்க்கட்சி அரசை மிரட்டுது... அரசு எதிர்க்கட்சியை குழப்புது... எல்லாம் மக்களைச் சாட்டி நடக்குது... மக்கள் தான் பாவம்...

**செய்தி : மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயங்களை நம்பியார் பார்வையிடவில்லை...**

மயிலர் : உதெல்லாம் பார்வையிட்டே அவர் கருத்துக் கூறப்போறார்... உந்த ஊர்சுற்றும் விடயமெல்லாம் ஒரு பம்மாத்து நடவடிக்கை தான்பாருங்கோ... எல்லாம் எப்பொழுதோ அவரவர் தேவைக்கும் விருப்புக்கும் ஏற்ப முடிவெடுத்திட்டார் நம்பியார் பாருங்கோ... மக்களின் பாதுகாப்பு, வாழ்வியல் உரிமைகளை புறந்தள்ளி விட்டு... இராணுவத்தின் பாதுகாப்பை மட்டுமே முக்கியத்துவப்படுத்தித்தான் அவற்றை யோசனைகள் இருக்கப் போகுது... பாருங்கோ...!

**செய்தி : முஸ்லீம் தரப்பு புறக்கணிக்கப்படின் அரசு பாரதூரமான விளைவைச் சந்திக்கும் - அமைச்சர் ஹக்கீம் எச்சரிக்கை.**

மயிலர் : முஸ்லிம் காங்கிரஸில் குத்து வெட்டு’ குழிபறித்தல் தொடங்கி, ஹக்கீமை ஒருசாரார் புறக்கணிக்கத் தொடங்கிய பின்னர் தான், அவருக்கு முஸ்லிம்கள் அரசால் புறக்கணிக்கப் படுகிறார்களோ என்ற நினைவு வந்திருக்கும் பாருங்கோ... இதுக்கு முந்தி தனது தலைமைத்துவப் பதவிக்கு ஆபத்தில்லாத போது முஸ்லிம்களைப் பற்றி பெரிதாக சிந்திக்கவில்லை... பதவிக்கு, ஆபத்து ஏற்படும் போதுதான் இனத்தவர் பற்றிய நினைவு வருவது சனநாயக அரசியலில் ஒரு இயல்பான விடயமாகி விட்டது பாருங்கோ...

**செய்தி : புலிகளை சட்ட பூர்வமான இராணுவமாக்க பிரதமர் ரணில் முயல்கின்றார்: சிகல உறுமய பிரச்சாரச் செயலாளர் கூறுகிறார்...**


மயிலர் : இந்தியாவின் சுப்பிரமணிய சுவாமி மாதிரி சிகல ஊறுமயக்காரர் மாறிவருகின்றனர் பாருங்கோ... புலிகளுக்கு எதிராக விடிந்தவுடன் என்ன வகையில் அறிக்கை விடலாம் என்பதே இரவிரவாக் கனவும்... கற்பனையுமாக இருந்து விட்டு பகலில் அறிக்கை வெளியிட்டு தங்கடை இருப்பைத் தாங்களே உறுதிப்படுத்தவேண்டிய பரிதாப நிலை சிகல உறுமயவுக்கு... தங்கடை சனத்திட்டையே செல்வாக்கு இல்லாதவையை செல்வாக்கு எப்படி மதிக்கப்படும் என்பது தெரியும் தானே.... பூச்சாண்டி காட்டியே அரசியல் நடத்தப் பாக்கினம்... அதுதான் பரிதாபம் பாருங்கோ...

**செய்தி : நாம் யாருக்கும் கைப் பொம்மைகளல்ல... மங்களவுக்கு ஆனந்த சங்கரி பதில்...**

மயிலர் : மங்களவுக்கு சங்கரியர் காட்டமாத்தான் பதில் சொல்லியிருக்கிறார்... சந்திரிகாவின்கைப் பொம்மையாக... இருக்கும் மங்கள சமரவீர கூட்டமைப்பினரை விடுதலைப்புலிகளின் கைப் பொம்மைகள் - பணயக்கைதிகள் எனக்கூறுவது தான் கோமாளித் தனமானது. பாருங்கோ தான் எப்படி இருக்கிறாரோ அப்படித்தான் மற்றவர்களும் இருப்பார்கள் என்றே மங்கள நினைக்கிறார் போலும்... ‘கொத்தடிமைகளாகவே’ இருந்து பழக்கப்பட்டவர்கள் வேறு எப்படி இருப்பார்கள்...?

# நறுக்கென...

## மொறகொடவின் இரண்டாவது முகம்...



**சிறிலங்காவின்** பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நம்பிக்கைக்குரிய நண்பரும், பொருளாதாரஆலோசகரும் அமைச்சருமான 'மிலிந்த மொறகொட' கறைபடியாத அரசியல்வாதி என்று தனது 'பிம்பத்தை' வெளிக்காட்டத் தீவிரம் காட்டி வருபவர். அப்படித்தன்னைத்தானே விளம்பரப்படுத்திக் கொள்வதில் வல்லவர்.

இவரின் இனவாத - அரசியல்வாத 'வடிவம்' அண்மைக் காலத்தில் மெல்ல மெல்ல வெளிவரத்தொடங்கியுள்ளது.

கட்டாய இராணுவ சேவைத்திட்டத்தை நடைமுறைப் படுத்திச் சிங்களப் படைத்தரப்பின் பலத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கருத்தில் தீவிரம் காட்டிவரும் இவர் பொருளாதார மறுசீரமைப்பு என்று கூறிக் கொண்டு அடுத்தமூன்றாண்டு காலத்திற்கான பாதுகாப்புச் செலவின ஒதுக்கீடு தொடர்பாக - அதனையே நாட்டின் அதி முக்கிய பிரச்சினையாகக் கருதி - ஐ.தே.முன்னணி ஆட்சிபீடம் ஏறியதும் - ஆராய்ந்த குழுவில் முக்கியஸ்தராக இருந்தவர்.

இலங்கைக்கான அமெரிக்க முகவர் என வர்ணிக்கப்படும் மொறகொட அமெரிக்க உலகமயமாதல் கொள்கையை பின்பற்றி இலங்கையை அமெரிக்க மயமாக்கும் முனைப்புடன் செயற்படுபவர் என்றும் விமர்சிக்கப்படுபவர்.

சமாதான நகர்வுகளில் அமெரிக்க அபிலாஷைகளை நிறைவேற்றச் செயற்படுபவர் எனவும் தென்னாசியப்பிராந்திய ஆசியப் பிராந்திய, வல்லாதிக்க சக்திகளால் சந்தேகிக்கப்படுபவர்..

இவர் அண்மையில் மட்டக்களப்பில், 'வீரம் விளை நிலம் வரவேற்கிறது' என்ற வரவேற்புப் பலகை விவகாரத்தில் நடந்து கொண்ட முறை - அதனை ஒரு பூதாகாரமான பிரச்சினையாக்கி - அதனை அகற்றுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்ட விதம், அதனை நடைமுறைப்படுத்துவதில் காட்டிய தீவிரம் அவரின் இனவாத அதுவும் பேரினவாத முகத்தை வெளிப்படுத்தியுள்ளதாகவே தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

வடக்கு- கிழக்கு- மக்களை பல்வேறு வகையிலும் அவமதிக்கும், எச்சரிக்கும், மிரட்டும் அறிவிப்புகளுடன் இராணுவம் நாட்டிவைத்த எத்தனையோ அறிவிப்புப் பலகைகள் அமைச்சருக்குத் தெரியவில்லை, ஆனால் மக்கள் தம் சுயவிருப்பத்தின் பேரில் தமது மண்ணில், தமக்கான உரிமையின் அடிப்படையில் நாட்டிவைத்த வரவேற்புப் பலகை தான் தொந்தரவை ஏற்படுத்தும் ஒன்றாகக் கண்ணில்பட்டுவிட்டது!

இதனை ஒரு சர்ச்சைக் குரிய கௌரவப்பிரச் சினையாக்கி இன்றைய சமாதான சூழ்நிலையில் ஒரு முறுகல் நிலையைத் தோற்று விக்கும் வகையில் நடந்து கொண்ட மொறகொட சமாதான பேச்சுவார்த்தைகளில் முக்கியஸ்தராக கலந்து கொள்வதுதான் ஆச்சரியம்.

உண்மையில் சமாதானத்தில் நம்பிக்கை கொண்ட கண்ணியமான செயற்பாட்டாளராக மொறகொட இருந்திருப்பாரேயானால் இதனை ஒரு விவகாரமாக கருதியிருக்கவேமாட்டார்.

அதுவும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சராகவும் இருக்கும் ஒருவர் - அறிவியல் ரீதியாக சிந்தித்துச் செயற்பட வேண்டிய ஒருவர். வெறும் அரசியல் ரீதியாகச் செயற்படும் ஒருவராக சின்னத்தனமாக நடந்து கொண்டுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் எத்தனை அம்சங்களை இன்னமும் அமுல் செய்யாது, இராணுவ நலன்களைப் பேணும் நோக்கும், அதனை மீறிவரும் அரசின் செயற்பாடுகள் அமைச்சருக்குத் தெரியவில்லை. ஆனால் 'வரவேற்புப்பலகை' மட்டும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலாக அமைச்சருக்குத் தென்பட்டுள்ளது ஆச்சரியமே இல்லை...

ஏனென்றால் 'பேரின வாதப் பார்வை' அப்படித்தான் சிந்திக்க வைக்கும்...

## சாத்தானும் வேதம் ஓதுகிறது



**சமஷ்டி** அமைப்புக் குறித்த கருத்துக்களையறிய பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திரிகா சந்தித்து பேசிவருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை அதிகாரப்பரவலாக்கல் சம்மந்தமாக பொதுசன ஐக்கிய முன்னணியும், அரசும் ஒரேகருத்தைக் கொண்டிருப்பதாக பொ.ஐ. முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு சமஷ்டி அமைப்பு குறித்து ஆராயச் சென்று திரும்பிய பின்னர் கருத்து வெளியிட்டும் உள்ளனர்.

உலகை சுயநிர்ணயம் பற்றியும் அவர்கள் வெகுவாகச் சிலாகித்து கூறுவதாகவும் அறியவந்துள்ளது.

ஆனால் முன்னர் பொ.ஐ.முன்னணி ஆட்சிக்காலத்தில் சமாதான ஆரவாரத்துடன் ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகா, அதிக பட்ச பெரும்பான்மை பலம் அரசுக்கு இருந்தும், நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தும் அவர்வசம் இருந்தும் சமாதானத்திற்கான செயற்பாடுகளை உதட்டளவில் மட்டும் வைத்துக் கொண்டு அதனை வெறும் - நாட்டையும், உலகையும் ஏமாற்றும் மூலோபாய மந்திரச் சொல்லாக பயன்படுத்தி பிரச்சாரத்தை மட்டும் செய்து கொண்டு, போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி அரசியல் இலாபங்களை இலக்கு வைத்து செய்ற்பட்டுவந்தமை வரலாறு.

சமாதானத் தேவதை வடிவிலான - உருமாற்றம் செய்து கொண்ட இரத்தக் காட்டேறி (DRACULA) போன்றே அவர் செயற்பட்டார்.

இங்கு இனப்பிரச்சினைஎன எதுவும் கிடையாது. பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமேயுண்டு என்றும் தமிழ்மக்கள் வந்தேறுகுடிகள் தானென்றும் நாக்கூசாமல் 'பச்சை' இனவாதம் பேசும் 'நீலம்'பாரித்த நாவையுடையவராக பகிரங்கமாகவே இயங்கினார்.

'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற அவரின் கோட்பாடு போரை நியாயப்படுத்தும் சித்தாந்தமாக அவரால் உச்சரிக்கப்பட்டது. தமிழ் நிலங்களை முற்றாக ஆக்கிரமித்து இராணுவமயமாக்கி மக்களை இராணுவப்பிடிக்குள் இறுக்கமாக்குவதன் மூலம் இனப்பிரச்சினையைத்தீர்த்து விடலாம் என்றே அவர் நம்பினார்.

'அதிகாரப் பரவலாக்கல்' தீர்வுப் பொதி என்ற ஏமாற்றுப் பொதியை 'கடைசிவரை' அவிழ்க்காமலே காலம் கடத்தினார். அவர் நினைத்திருந்தால் - அவர் ஒரு நியாயபூர்வமாகச் சிந்திக்கும் மனிதநேயப் பண்புடையவராக இருந்திருந்தால் மூன்றாம் ஈழப்போர் ஏற்பட்டிருக்கவே மாட்டாது. அப்படிப்பட்டவர், வெறும் அதிகாரப்பரவலாக்கலையே அமுல்செய்யும் திராணியற்றவர், சமஷ்டி பற்றி கருத்துக் கேட்கிறாராம்!

கோமாளித்தனமாக இல்லையா? உலகத்தை 'ஏமாளி'யாக்க அவர் நினைக்கிறாரா?

இதேவேளை சிறிலங்காவின் சுதந்திரதினத்தன்று கடந்தகால சம்பவங்களையெல்லாம்... யுத்தம் தொடர்பான அனைத்தையும் மறந்துவிட வேண்டும் என்றும் 'தத்துவம்' பேசியுள்ளார். சிலரைப் பலகாலமும், பலரைச்சிலகாலமும் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்றமுடியாது என்பதை சந்திரிகா அம்மையார் தெரிந்து கொள்வது அவசியம்.

## முரண்படும் முஸ்லிம் தலைமைகள்



**இன்றைய** சமாதான முயற்சிகளில் சிக்கலை அல்லது உடைவை, தேக்கநிலையை ஏற்படுத்த எத்தனையோ உள்ளக வெளியகசக்திகள் முயன்றுவருகின்றன என்பது வெளிப்படையாகத் தெரியும் விடயம் தான்.

எத்தனையோ நெருக்கடிகள், குழப்பங்கள், மற்றும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் சமாதானத்தை எட்டுவதற்கான, நிரந்தர தீர்வொன்றை அடைவதற்கான முயற்சிகளில் புரிந்துணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் விடுதலைப்புலிகள் செயற்பட்டு வருவதும் அதனைச் சர்வதேச சமூகம் பாராட்டி, மகிழ்ச்சி தெரிவித்து உற்சாகப்படுத்தி வருவதும், உதவிகளை செய்வதற்கு நேரடியாகவே முன்வந்திருப்பதும் பலரை எரிச்சலுக்குள்ளாக்கியிருக்கிறது.

சிக்கலான பிரச்சினைகளின் சிக்கலை நீக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகையில் நிலைமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பொறுப்புக் கொண்டவர்களே, வரண்ட அரசியல் கொள்ளைகளில் ஊறியவர்களாய், சுய அரசியல் பதவி அபிலாசைகளுக்கும் எதிர்கால அரசியல் அநுகூலங்களுக்கும் ஆட்பட்டவர்களாய் செயற்படுவது தான் வேதனைக்குரியது.

எப்பவும் - எங்கேயும் - ஓர் ஒட்டுண்ணி வாழ்க்கைக்கே தம்மை இசைவாக்கம் செய்து கொண்டு பச்சோந்தி வாழ்க்கை நடத்துவோர் பற்றி எவரும் அக்கறைகொள்ளப் போவதில்லை... அவர்களின் சுயமே அதுதான். ஆனால் மிகப் பெரும் இனத்தனித்துவ நலன் பற்றிப் பேசும் முஸ்லிம் கட்சிகள் - குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயற்பாடுகள் ஏதோ ஒரு கட்டத்தில் சமாதான நகர்வுகளின் உடைவை எற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டவையாக, வேறு புறசக்திகளின் ஆதரவு அழுத்தங்களின் பின்னணியில் மேற்கொள்ளப்படுவதாகவே தெரிகிறது.

வலுவான முஸ்லிம் மக்களின் சக்தியை, ஒருமைப் பாட்டை அவர்கள் ஒரேகட்சியின் கீழ் அணித்திரள்வதை சிங்களப் பேரினவாதிகள் ஒருபோதுமே விரும்பியதில்லை.

பதவிகளுக்கு விலைபோகக் கூடிய தலைமைகளாகவே முஸ்லிம் தலைவர்களை சிங்கள அரசியல் தலைமைகள் கணிப்பிட்டு தங்களுக்கு, தங்களின் அபிலாஷைகளுக்கு, பிற்பாட்டுப்பாடும் அமைப்புகளாகவே முஸ்லிம் கட்சிகளை பங்குபோட்டும் வந்துள்ளனர். இதனை எவரும் நிராகரிக்க முடியாது.

சிறுபான்மை சமூகத்தவர் அவர்கள் தமிழ்மக்களாயினும் இஸ்லாமியத் தமிழர்களாயினும், மலையகத்தமிழர்களாயினும், பேரினவாதிகள் தமது எடுபிடிகளாக, பதவிகளைக் கொடுத்து, உரிமைகளைப் பறிக்கக் கூடிய தன்மை கொண்டவர் களாகவே சிங்களத்தலைவர்களால் கருதப்பட்டு நடத்தப்பட்டும் வந்துள்ளனர். இந்த வகையில் 'மித்திர பேதம்' என்ற பஞ்சதந்திர கோட்பாட்டை அவர்கள் மிக தந்திரோபாயத்துடன் காலத்திற்கு காலம் நடைமுறைப்படுத்தியும் வந்துள்ளனர்.

இப்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பிளவுகளுக்கும், முரண்பாடுகளுக்கும் பின்னணியில் எத்தகைய சக்திகள், என்ன நோக்கத்துடன் இயங்குகின்றன என்பது அவர்கள் அறியாத விடயமல்ல...

முஸ்லிம்கள் தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் - தமக்குள் முரண்பட்டு பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கி, சீரழிவுக்கு தம்மினத்தை இட்டுச் செல்லக் கூடாது. மூன்றாந்தர, பதவிப்பதர்களான அரசியல் வாதிகளாக இயங்கி வரலாற்றுத் தவறுகளுக்கு அவர்களை பொறுப்பானவர்களாகி விடக்கூடாது...

புறசக்திகள் கையாட் களாகி, சுய இருப்பினை, யதார்த்தத்துக்கு முரணான அரசியலைப் பேசி, தங்களுக்குள் பிளவுண்டு முஸ்லிம் தலைமைகள் இழந்து விடக் கூடாது. வரலாறு உங்களை குற்றவாளிகளாக இனம்காட்டிவிடும்...



## ஜெனரல்களின் வருகைகளும் கழுகுப்பார்வைகளும்

**உயர்** பாதுகாப்பு வலயம் தொடர்பாக... அதாவது இராணுவம் ஆக்கிரமித்து, உயர்பாதுகாப்பு வலயம் எனப் பெயரிட்டு, நிலை கொண்டு நிரந்தரமாய் வேரூன்ற நினைத்திருக்கும் பொதுமக்களின் உரிமையான வதிவிடப் பிரதேசங்களில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எழுந்துள்ள சிக்கலை ஏற்கனவே சிறிலங்காவின் இராணுவ அதிகாரியும், யாழ்குடாவுக்கான பாதுகாப்பு படைகளின் தளபதியுமான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மேலும் சிக்கலாக்கி விட்டிருந்தார்.

இராணுவ நலன்களைப் பேணும் நோக்குடன், இராணுவத்தினரின் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தும் திட்டத்துடன் பொதுமக்களின் வாழ்வியல் உரிமைகளைப் புறந்தள்ளி - நிராகரித்து அவர் இப்பிரச்சினை தொடர்பாக முன்வைத்த ஆலோசனைகள் விடுதலைப் புலிகளால் முற்றாக நிராகரிக்கப்பட்டதுடன். அதில் அவர்கையாண்ட நாகரீகமற்ற வார்த்தைப் பிரயோகங்கள் கடும் கண்டனத்துக்கும் உள்ளாகியது.

பின்னர் இதுபற்றி ஆராய்ந்து முடிவு கூறுமாறு இந்தியாவின் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான லெப்ரினன்ட் ஜெனரல் சதீஸ் நம்பியார் வரவழைக்கப்பட்டார்.

அவர் வந்தார், பார்த்தார், சென்றார், மீண்டும் வந்தார், பார்த்தார், பேசினார் மீண்டும் சென்றுவிட்டார். இதற்குள் உயர்பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் தொடர்பாக அவரின் பூர்வாங்க அறிக்கை குறித்து விரிவாக அதிகாரிகளுக்கு விளக்கியதாகவும், சரத் பொன்சேகாவின் பார்வையையே நம்பியாரும் கொண்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இவ்விபரம் இன்னும் முழுமையாக வெளியிடப்படாவிட்டாலும், அவரின் இராணுவப் பார்வை சரத் பொன்சேகாவின் இராணுவ அணுகு முறை ஆலோசனைகளுடன் முரண்படவில்லை...

கழுகு கழுகுப்பார்வை தான் பார்க்கும் 'புறா'ப்பார்வையை அதனிடம் எதிர்பார்க்க முடியாதுதான்.

இதன் பின்னர் மீண்டும் திருத்தங்களுடன் வருவதாகக் கூறி நம்பியார் சென்றுவிட்டார்.

இது போல பிரித்தானிய இராணுவ அதிகாரியான ஜெனரல் மைக்கல்றோ. என்பவரும் இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிகிறது: அது குறித்த விபரங்களும் வெளிவரவில்லை.

இப்போது 'உலகமகா சக்தி'யான அமெரிக்காவின் ஆலோசனையும் இதுதொடர்பாக கோரப்படும் சாத்தியம் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. இதனடிப்படையில் தான் - நிலைமைகளை ஆராயுமுகமாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரி டேவிட் என்பவர் யாழ் குடாவுக்கு விஜயம் செய்ததாகவும் தெரிய வந்துள்ளது...

அமெரிக்காவில் இருந்தும் ஒரு ஜெனரல் இதனை ஆராய வரக்கூடும்.

ஜெனரல் பொன்சேகா, ஒரு ஜெனரல் நம்பியார், ஜெனரல் மைக்கல்றோ... வரிசையில் அவரும் இடம்பிடிக்கலாம்...

எதுவானாலும் கழுககளின் பார்வையில் 'கனிவை' ஏவரும் எதிர்பார்க்க முடியாது..

**செங்குட்டுவன்**

ஆண்கள் தவறு செய்வது சுயநலத்தால், பெண்கள் தவறு செய்வது பல வீனத்தால். - மதொம் தெஸ்தால்

# சந்திரிகாவை நோக்கி எழும் ஆவிகளின் கரங்கள்

**வின்சன்ற் புளோரன்ஸ்**

**சூரிய** கந்தவில் தோண்டப்பட்ட புதை குழியினருகே மார்பிலடித்துக் கதறி இழவு காத்தே தன் ஆட்சியைத் தொடங்கிய சந்திரிகாவின் "வன்செயல்களுக்கு உங்களைப் போலவே தந்தையை, கணவனை பறிகொடுத்தவள்" என்ற தோற்றம் விரைவிலேயே....

"வன் செயல்களுக்கு என்னைப் போலவே தந்தையை கணவனை உறவுகளைப் பறி கொடுக்க வைத்தவள்." என்பதாக மாறியது அவரது தந்தையார் என்ன தான் கேம்பிரிட்ஜ் முதல் மாணவராக இருந்தாலும் "ரத்வத்தைகளின் றோயல் இரத்த குடும்ப தூய்மை"யை கெடுக்க வந்தவராகவே கருதப்பட்டு படுகொலை செய்விக்கப்பட்டதாக வதந்திகள் உலாவின. சந்திரிகாவின் கணவரான குமாரணதுங்கவின் கொலை மற்றும் உபாலிகுறூப் நிறுவன உரிமையாளரான உபிலி விஜய வர்த்தனவின் மர்ம மறைவு முதலிய வற்றுக்குப் பின்னால் இதே ரத்வத்த குடும்ப இரத்தத் தூய்மை பேணும் கைங்கரியமும் இருந்திருக்கலாம். ஆனால் செம்மணியில் புதையுண்டு எரியுண்டு போனவர்கள் எதுவுமே தெரியாத அப்பாவிகள். 800க்கு மேற்பட்ட இதுவரையில் 640 பேர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்க முன்வந்த சந்திரிகா அரசின் முயற்சி மரணத்துக் காரணம் குறிப்பிடுவதில் ஏற்பட்டசர்ச்சையால் தடைப்பட்டுப் போயிற்று. இவர்களுடைய கொலைக்கு சந்திரிகாவும் அவரது படைத்தளபதிகளுமே பொறுப்பு என்று சர்வதேச மனித உரிமை அமைப்பு தீர்ப்பிட்டு விட்டது. அவர்களுடைய ஆவிகள் சந்திரிகாவைச் சுற்றி "மரண நடனம்" ஆடிக் கொண்டிருக்கின்றன.

கிளி நொச்சிப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த வேளை, வீடுபார்க்கவும், தேங்காய் புடுங்கவும் சென்று இராணுவத்தால் படுகொலையுண்டு தற்போது எலும்புக் கூடுகளாய் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் (அண்ணளவாக) 200 பேர்களின் ஆவிகளும் இந்த மரண நடனத்தில் இணையத்தான் போகின்றன.

தென் தமிழீழத்தில் இடம் பெற்ற படுகொலைக்கு பலியானவர்களின் ஆவிக் கரங்கள் குரல் வளையை நெருக்க சந்தர்ப்பம் பார்த்துள்ளன.

தற்போதைய புள்ளி விபரங்களின் படி தென் தமிழீழத்தில் 8000க்கு மேற்பட்ட விதவைகள் இருக்கிறார்கள் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தென்னிலங்கையிலோ, பத்திரிகையாளர்கள் உட்பட பலரின் குருதியால் சனாதிபதி மாளிகைக்குச் செல்லும் பாதை மூழ்கியிருக்கிறது என்று பிரபல பத்திரிகையாளர் பிறெட்ரிக்கா ஜான்ஸ் எழுதும் அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது. அந்த ஆவிகளும் சும்மா இருக்கப் போவதில்லை.

சரி. இவர்கள் எல்லோருமே ஒருவகையில் சந்திரிகாவின் "எதிரிகள்" என்று கணக்குக் கழிக்கலாம்.

ஆனால் சமீபத்தில் வெளியாகியிருக்கும் தகவல்கள், உறவுகளை பறிகொடுத்து ஏற்கெனவே துன்பத்தால் விறைத்துப் போய் விட்ட எமது தலைகளையே அடியோடு மரத்துப் போகச் செய்பவையாக இருக்கின்றன.

முல்லைத்தீவில் 1200 வீரர்களைக் கொண்டிருந்த இராணுவ முகாம் தப்பிச் சென்ற ஒருவரைத் தவிர்த்து ஏனையவர்கள் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் வைத்து மக்கள் பலரும் நேரடியாகக் கண்ட விடயம். ஆனால் இராணுவத்தின் பொன்விழா மலரில் 56 வீரர்கள் மட்டும் முல்லைத் தீவில் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அண்மையில், காணாமல் போன படையினரின் குடும்பத் தவர்களுக்கு பம்பைமடுவில் கிடைத்த அனுபவம் குறித்து 'டெய்லி நியூஸ்' 16/10/2002 அன்று வெளிவந்த இதழில் NO WAR ZONE பகுதி அப்படியே மொழிபெயர்க்கப்பட்டு இப்பக்கத்தில் பெட்டிச் செய்தியாக வெளிவந்துள்ளது. பம்பைமடுவிலும், சாலிய புரவிலும் இருக்கும் தகன பூமிகளின் இரகசியம் வெளிவந்துள்ளது. தங்கள் நாட்டுக்காக சேவையாற்ற வந்தவர்களுக்கு "அப்படியொரு" கௌரவம் கிடைத்துள்ளது. இவர்கள் எங்களுடைய அப்பாவிகளை விட அப்பாவிகள். ஆனால் அவர்களுடைய ஆவிகளும் பழிவாங்காமல் சாந்தியுறப் போவதில்லை. இவர்களில் 540 பேர் தொடர்பாக மனித உரிமை மீறல் மனு அண்மையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த 540 பேருக்கு இராணுவ மரியாதை செலுத்த வேண்டும் என மனுவை விசாரித்த நீதிபதி பணித்திருக்கிறார்.



அதுமட்டுமல்ல சில காலத்துக்கு முன் மாங்குளம் வரை இராணுவம் நிலை கொண்டிருந்த போது, A9 வீதியால் தென் பகுதிக்கான பயணம் நிகழ்ந்த நாட்களில் அப்பாதையால் சென்று வந்த வியாபாரிகளில் ஒருவர் கனகராயன் குளம் பகுதியில் ஒரு பாலத்துக்கருகே பிணங்களை எரிப்பதற்கென்றே தண்டவாளங்களால் அமைக்கப்பட்டிருந்த மேடையொன்றையும் அதற்கருகே சாம்பல் குவியல்கள், மற்றும் மலர் வளையங்களையும் கண்டதாகவும் தெருவித்திருந்தார். ஆக வடக்குத் தெற்கு, கிழக்கு மேற்கென நாலா புறமும் இருந்து எழுகின்ற ஆவிகளின் கரங்கள் சந்திரிகாவை நோக்கி நீளவே செய்யும் என்பது மட்டும் நிச்சயமானதாகும்.

## மரணித்தவர்களை அகௌரவப்படுத்தல்




**2002** நவம்பர் 28ம் திகதி ஓமந்தையிலுள்ள ICRC இன் சூனியப் பிரதேசத்திலே, கேணல் தீபனும் பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவும் போர்க்கைதிகளை விடுவிப்பதற்கான ஆவணத்தில் ஒப்பமிட்டனர். இதற்கு ஒரு நாள் முன்பதாக, நடவடிக்கையில் காணாமல் போய்விட்டவர்கள் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் தாய்மார்களைக் கொண்ட குழுவொன்றுக்கு, மேலே குறிப்பிட்ட நிகழ்வில் தங்கள் பிள்ளைகள் விடுவிக்கப்பட்டதைக்கண்டு மகிழ்வுற்ற தாய்மார்களின் அனுபவத்திலிருந்து, முற்றிலும் வேறுபட்ட அனுபவம் கிட்டியது. இவர்கள் யாழ் குடாநாட்டில் காணாமல் போனோரின் தாய்மாரைச் சந்திக்கச் சென்று கொண்டிருந்தார்கள்.

வவுனியாவில் அவர்கள் கௌர மான தகவல் ஒன்றைக் கேள்விப்பட்டார்கள். மன்னார் வீதியில் பம்பைமடு என்ற இடத்தில், சண்டைகளில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான வீரர்களின் சடலங்களை இராணுவம் எரித்து அழித்தது என்ற தகவலே அது.

இவ்வாறு பெரும் தொகையில் தகனம் செய்யும் இடங்கள் இருப்பதை வழமையாகவே இராணுவம் மறுத்து வந்ததோடு, பழுதடைந்தவையும் அடையாளம் கண்டு தெற்கிலுள்ள அவரவர் வீடுகளுக்கு அனுப்ப முடியாத அளவுக்குச் சிதைந்து போனவையுமான உடல்களே வவுனியாவில் தகனம் செய்யப் படுகின்றன என்றே சொல்லி வந்தது.

இராணுவம் இப்படிச் சொன்னாலும் இப்படிச் சொல்வதற்குக் காரணம் இவர்களில் அனேகமானோரை நடவடிக்கைகளின் போது காணாமற் போனோர் பட்டியலில் சேர்த்துவிட்டு, நடவடிக்கைகளிலான இழப்புகளைக் குறைத்துக் காட்டுவதாகும் என்று பலர் நம்புகிறார்கள்.ஆனையிறவு முகாம் மீதான புலிகளின் வலிந்த தாக்குதலின் பின் கிட்டத்தட்ட 2000 உடல்கள் ICRC யிடம் கையளிக்கப்பட்டதாகவும் ஆனால் இவற்றுள் 500 உடல்களை மட்டும் ஏற்றுக் கொண்ட இராணுவம் மிகுதியை தங்களுடைய வீரர்களுடையதில்லை என்று நிராகரித்து, இந்த இடத்தில் வைத்து அவற்றை எரித்ததாகவும் நம்பப்படுகிறது.

ஒவ்வொரு நடவடிக்கையின் பின்னும் உடல்கள் இந்த இடத்துக்குக் கொண்டு வரப்பட்டதாக அவ்விடத்து வாசிகள் தெரிவித்தார்கள். நீண்ட காலத்துக்கு முன்னரே, அடையாளம் காணப்படாத வீரர்களின் உடல்களை எரிக்கும் இடமொன்று வவுனியா மன்னார் வீதியில் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். ஆனால் இதுவரை அந்த இடத்தை வந்து பார்க்க முடியவில்லை. எங்கள் பிள்ளைகள் தகனம் செய்யப்பட்டிருக்கக் கூடிய இடத்தை வந்து பார்க்கவே நாம் விரும்பினோம். இந்த இடத்திலிருந்து சிறிது மண்ணை எடுத்துச் செல்ல நாம் விரும்பினோம். என்று யாழிற்கான இந்தப் பயணத்தின் ஒழுங்கமைப்பாளர் விசாகா தர்மதாச கூறினார். தன்னுடைய மகன் காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, தங்கள் பிள்ளைகளின் கதியை அறியாமல் கலங்கும் பெற்றோர்களுக்கு ஆறுதல் பெற்றுத் தருவதையே அவர் செய்து கொண்டிருக்கிறார்.

இந்த இடத்தை ஒரு நாள் முழுவதும் தேடியலைந்தபின், மாலை மயங்கும் நேரத்தில இந்தத் தாய்மார்கள் அந்த இடத்தைக் கண்டு பிடித்தார்கள். வவுனியா - மன்னார் வீதியில் வவுனியாவிலிருந்து 8 கி.மீ தூரத்தில் அது இருந்தது. அவர்கள் அந்த இடத்தைத் தேடி வந்த பொழுது தங்கள் பிள்ளைகளை எரித்திருக்கக்கூடிய இடத்தில், கருமை படிந்த கறையொன்று இருக்கும் என்ற எதிர்பார்ப்போடு வந்தார்கள். ஆனால் அவர்கள் கண்டது, அவர்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி விட்டது.

எலும்புகள் - அதாவது மனித எலும்புகள் பெரிய தொரு தரிசு நிலப்பரப்பொன்றில் பரந்து கிடப்பதையும் பெரும் குவியல்களாக சாம்பல் குவிந்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள்.

தங்கள் நாட்டை, தாய் நாட்டைக் காக்கவென வீடுகளிலிருந்து புறப்பட்டு, தங்களின் தளபதிகளினால் கைவிடப்பட்டவர்களான தங்களின் பிள்ளைகளின் எச்சங்கள் தான் இவை என இத்தாய்மார்கள் நம்புகிறார்கள்.

அவர்கள் இராணுவ மரியாதைக்குத் தகுதியானவர்கள் என்றில்லாவிட்டாலும், அவர்கள் மனிதப்பிறவிகள் என்ற எண்ணம் கூட இல்லாமல், புறம்போக்கு நிலமொன்றில் குவித்து எரிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய நினைவுகள் தூய்மை கெடுக்கப்பட்டிருக்கின்றன.

இறந்து போன எங்கள் பிள்ளைகளுக்கு முழு இராணுவ மரியாதை வழங்கப்பட்டதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் நாங்கள் இங்கு வந்து இதனைக்கண்டோம. எங்கள் வீட்டு நாய் கூட இதைவிட கௌரவமாக நடத்தப்படும் என்று காணாமல் போய்விட்ட வீரர் ஒருவருடைய தந்தையாரான விஜய சிறி குணசிங்க தெரிவித்தார்.

இந்த உறவுகளுக்கு அவர்களது அன்புக்குரியவர்கள் நடவடிக்கையில் காணாமல் போய் விட்டார்கள் என்று தெரிவித்த அதேவேளை வவுனியாவில் உள்ள இந்த இடத்தில் இவர்களது உடல்களை இராணுவம் எரித்து அழித்திருக்கிறது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

தாங்கள் ஆளிழப்புகளையும் இழப்புகளையும் குறைத்துக் காட்டுவது தங்களைப்பற்றித் தாங்களே உருவாக்கிக் கொண்டிருக்கும் படிமத்தைப் பேணுவதற்கும் ஆட்சேர்ப்பு முயற்சிகளுக்கும் உதவும் என்று இராணுவத்தில் உள்ள அதிகாரிகள் கருதிய ஒரே காரணத்துக்காக இந்தப் பெற்றோர்கள் பல வருடங்களாக நம்பிக்கைக்கும் ஏமாற்றத்துக்குமிடையேயான பரிதாப வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்துள்ளது.

ஆனால் இவர்கள் கூறுவது போல் இவர்களுடைய பிள்ளைகளின் எச்சங்கள் இவைதான் என்று மெய்ப்பித்ததற்கான திடமான சான்றுகள் எவரிடமுமில்லை. இறந்த வீரர்களுடைய எலும்புகள்தான் இவை என்பதை இராணுவம் தொடர்ந்து மறுக்கக் கூடும். இவை வேறுயாருக்கும் சொந்தமாக இருக்கக் கூடிய வாய்ப்புக்கள் இல்லா விட்டாலும் இந்த இடத்திலும் சாலியபுர சேமக்காலையிலும் உள்ளவை இந்த வீழ்ந்து விட்ட நாயகர்களின் எச்சங்கள் தான் என உறுதிப்படுத்திக் கொள்ள அவற்றின் மீது மரபணுப் பரிசோதனைகள் நிகழ்த்தும்படி சனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி ஆகியோரை விசாகா தர்மதாச கேட்டுக் கொண்டுள்ளார்.

இவை நடவடிக்கையில் காணாமல் போய் விட்ட வீரர்களின் எச்சங்கள் தான் என மெய்ப்பிக்கப்பட்டால் அவர்கள் கொல்லப்பட்ட தாக்குதல்கள் நிகழ்ந்த வேளையில் பொறுப்பாகவிருந்த படைத்துறை அதிகாரிகள், காணாமல் போய்விட்ட ஆயிரக்கணக்கான வீரர்களின் குடும்பங்கள் அனுபவித்த வருடக்கணக்கான துன்பங்களுக்கு பொறுப்பானவர்களாகக் கருதப்படவேண்டும்.

போர் வீரர்களுடைய உயிர்களை அகௌரவப்படுத்தும் சித்தத்தை இந்த அதிகாரிகள் கொண்டிருக்கிறார்கள் என்றால் தாங்கள் "பயங்கரவாத சந்தேகநபர்கள்" என்று கூறி கைது செய்பவர்களின் உயிர்களுக்கு இதைவிடக் குறைந்த மரியாதையைக் காட்டியிருப்பது ஒன்றும் வியப்புக்குரிய விடயமல்ல.

இந்தச் சந்தேக நபர்கள் மனிதப் புதைகுழிகளில் தங்கள் இறுதியைக் கண்டிருக்கக் கூடும். நடவடிக்கைகளில் காணாமல் போனவர்களின் உறவினர்களைப் பொறுத்த வரை பம்பைமடு மனிததகன பூமியைப் பற்றிய விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடு செய்வது அரசின் கடமையாகும்.

(நன்றி டெய்லி நியூஸ்)


# சமாதான முயற்சிகள் குழம்பிப்போய்விடுமா?

**றுசாங்கன்**

**தற்போதுள்ள நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் மூலமாகவோ,அன்றி அரசியலமைப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தியோ தனக்குச் சார்பான ஒரு அரசை அமைக்கக்கூடிய ஏதுநிலைகள் சந்திரிகாவுக்கு குறைவென்றே கூறவேண்டும். அப்படியே அவர் செய்துவிட்டாலும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளைக் குழப்புவதென்பது சாத்தியமான காரியமல்ல.**

"என்னதம்பி.... இந்தமுறை ஏதும் சரிவருமே....?.திரும்பியும் தொடங்கீடும் போலைகிடக்கு".

இதுதான் அண்மைக்காலமாக என்னைச் சந்தித்த பலரும் வெளிப்படுத்தும் உணர்வாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. சமீபகாலமாக இலங்கையின் அரசியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் காரணமாக, சமாதானங் குறித்த மக்களின் நம்பிக்கை ஆட்டங்கண்டுவருவதையே இது சுட்டுவதாக உள்ளது. வழக்கம்போலவே இம்முறையும் தமது பிரச்சினைகளுக்குச் சமாதான வழியில் தீர்வுகாண எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் தோல்வியிலேயே முடியப்போகிறது என்ற அச்சம் அவர்களை வாட்டத் தொடங்கிவிட்டது என்பதையே இது காட்டிநிற்கிறது. இருக்கின்ற நிலைமைகளும் அவர்களது இந்தச் சந்தேகத்தை நியாயப் படுத்துவதாகவே அமைந்திருக்க, அவர்களைச் சுற்றியுள்ள சில ஊடகங்களும் இந்தச் சந்தேகங்களுக்குத் தீனிபோடும்வகையிலேயே கருத்துக்களை வெளிப்படுத்திவருகின்றன. ஆக,நம்பிக்கை தரக்கூடிய ஒளிக்கீற்று எதனையும் காணமுடியாதவர்களாகவே அவர்கள் இருந்துவருகிறார்கள். நிலைமை களைச் சற்றுச் சீர்தூக்கிப் பார்க்கும் பயிற்சியையும் ஊடகங்களின் இந்தப் போக்கால் அவர்கள் இழந்துநிற்கிறார்கள்.ஒருவருட காலத்துக்கும் மேலாகக் கடைப்பிடிக்கப் பட்டுவரும் போர்நிறுத்தமும், நான்காம் சுற்றையும் கடந்து முன்னேறும் சமாதானப் பேச்சுமுயற்சிகளும் ஓரளவுக்கு நம்பிக்கையூட்டினாலும்,இடையில் கேட்கும் அபஸ்வரங்களால் அவர்கள் நிம்மதியிழந்து போகின்றனர். உயர்பாதுகாப்பு வலயச் சிக்கலும், பாராளுமன்றக் கலைப்புத் தொடர்பான வதந்திகளும் அவர்களது சமாதானக் கனவுகளைக் கலைந்துபோகச் செய்கின்றன.தற்போது மேற்கொள் ளப்பட்டுவரும் இந்தச் சமாதான முயற்சிகளும் தோல்வி கண்டுவிடுமா?, மீண்டும் போர் ஆரம்பித்துவிடுமா? என்றெல்லாம் அச்சம் கொள்வதற்குமுன்னர்,இம்முறை சமாதான முயற்சிகளில் இருதரப்பும் கடைப்பிடித்துவரும் அணுகு முறையையும்,தற்போது உள்நாட்டு அளவிலும், சர்வதேச அளவிலும் காணப்படுகின்ற சூழ்நிலையையும் அடிப்படையாகக் கொண்டு இந்த விடயத்தைச் சீர்தூக்கிப்பார்ப்பது அவசியம்.அவ்வாறு நோக்குவோமாக இருந்தால் சந்தேகங்களையும்,வெறும் ஊகங்களையும் தவிர்த்து, நாம் பிரச்சினையைக் காரணகாரியத் தொடர்புடன் விளங்கிக்கொள்ளமுடியும். நான்காம் சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே பாதுகாப்பு வலயச் சிக்கல் தொடர்பான சந்தேகங்கள் வலுப் பெற்றிருந்தன.இதன் காரணமாக பேச்சுக்கள் குழம்பிப்போகலாம் என்று கருதுமளவுக்கு அப்போது இந்தச் சந்தேகம் கடுமையானதாக இருந்தது. ஆனால்,நான்காம் கட்டப் பேச்சு முடிவுகள் இந்தச் சந்தேகத்தைப் பொய்யாக்கியது.சிக்கலான பிரச்சினைகளைக் கையாள்வதற்கு நோர்வேயின் அனுசரணையுடன் சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் கடைப்பிடித்துவரும் யதார்த்தமான அணுகுமுறையே இதற்குக் காரணம் எனலாம்.









இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான சிக்கல்,யாழ் படைத்தளபதியாலேயே உயர்பாதுகாப்பு வலயந்தொடர்பான படைத்துறைச் சிக்கலாக வியாக்கியானிக்கப்பட்டது. மக்களது வாழ்விடங்களில் நிலைகொண்டுள்ள படையினரது நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி மக்களை மீளக் குடியேற அனுமதிக்குமாறு புலிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்,படையினரை யாழ் மண்ணிலிருந்து வெளியேற்ற புலிகள் மேற்கொள்ளும் யுத்த தந்திரம் என்றே புரிந்துகொள்ளப்பட்டது-அல்லது வேண்டு மென்றே திரிக்கப்பட்டது. இதன்காரணமாகவே இந்த விவகாரம் அந்தளவுக்குச் சூடுபிடித்திருந்தது.

ஆனால் பேச்சுக்களின்போது இருதரப்பும் எதிர்த்தரப்பு நியாயங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு யதார்த்தபூர்வமான் அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்க இணக்கம்கண்டன. இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற விவகாரம் ஒரு மனிதாபிமானப் பிரச்சினை என்பதை ஏற்றுக்கொண்ட அரச தரப்பு அந்த அடிப்படையில் இப்பிரச்சினையை அணுகச் சம்மதித்தது.அதேசமயம்,இதில் சம்பந்தப்படும் இராணுவத் தரப்பைக் கையாள்வதில் ரணில் அரசுக்கு இருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கலைப் புரிந்துகொண்டு இதனைப் படிப்படியாகச் செய்துமுடிப்பதற்குப் புலிகளும் சம்மதித்தனர்.ஆக,இருதரப்புமே எதிர்த்தரப்புக்கு இருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கல்களைப் புரிந்துகொண்டு சமாதான நகர்வுகளை முன்னெடுப்பது என்ற தீர்மானத்துடனே செயற்பட்டுவருகின்றன என்பது வெளிப்படையாகிறது.ஐம்பது வருடகால முரண்பாடு,இருபது வருடகாலப் போர் என மிக நீண்ட வரலாற்றைக்கொண்ட இந்தச் சிக்கலுக்கு தீர்வுகாண்பதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்பதை நான்காம் சுற்றுப் பேச்சில் இருதரப்புப் பிரதிநிதிகளின் தலைவர்களும் ஊடகங்களுக்குத் தெளிவாக விளக்கியிருந்தனர்.

ஆனால் துரதிர்ஸ்டவசமாக இந்த பேச்சுக்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் இந்த நடைமுறையை மக்களுக்கு விளக்க ஊடகங்கள் தவறிவிட்டன.நடைமுறையில் பிரயோசனமற்றுப்போன இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கான உபகுழுவிலிருந்து விலகுவது என்கின்ற புலிகளின் முடிவை அதிகமுக்கியத்துவம் கொடுத்து வெளியிட்ட ஊடகங்கள்,அதேசமயம் இருதரப்பும் பேச்சுக்களின்முடிவில் வெளியிட்ட இந்த நிதானமான கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறிவிட்டன.உயர்பாதுகாப்பு வலயச் சிக்கலால் பேச்சுக்களில் முரண்பாடுகள் எழும் என்று முன்னதாகவே ஊகங்களை வெளியிட்டிருந்த ஊடகங்களுக்கு,பேச்சுக்களின் முடிவில் தாம் வெளியிட்ட அந்தக் கருத்தை நிரூபித்திக்காட்டவேண்டிய தேவை காரணமாக இந்தச் சிறிய முரண்பாடு பெரிதுபடுத்தப்பட்டுவிட்டதோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்த நான்கு கட்டப் பேச்சுக்களின்போதும் எதிர்பார்க்கப்பட்ட (அல்லது ஊடகங்களால் எதிர்வுகூறப்பட்ட) எத்தனையோ விடயங்கள் செய்துமுடிக்கப்படவில்லை.இடைக்கால நிர்வாகம், கூட்டுச் செயலணிக் குழு என்றெல்லாம் திட்டமிடப்பட்ட விடயங்கள் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகக் கைவிடப்பட்டு, பொருத்தமான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன.இது பேச்சுக்களின் போக்கில் தவிர்க்கமுடியாதது.நான்காம் கட்டப் பேச்சுக்களின் முடிவில் இந்த விடயத்தை கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெளிவாக விளக்கியிருந்தார்.முப்படைத் தளபதியும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியுமான சந்திரிகாவுக்கு முகம்கொடுத்துச் செயற்படும் அளவுக்கு இன்னமும் ரணில் அரசு பலப்படவில்லை என்பதால் சற்று அவகாசம் கொடுத்துச் செயற்படுவோம் என்று அவர் தெளிவாகவே குறிப்பிட்டிருந்தார்.எனவே இந்தச் சமாதான முயற்சிகளில் இடையிடையே சறுகல்கள் ஏற்படுவது இயல்பானதே.ஆனாலும்,போர் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுவிட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கு வேண்டிய புனர்வாழ்வு,புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபடி,சமாதான வழியில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கிடைத்த இந்த வாய்ப்பை இயன்றளவு முயன்றுபார்த்துவிடுவதில் தவறேதும் கிடையாது.அதையே இன்று புலிகள் செய்துவருகின்றனர்.

இந்தச் சமாதான முயற்சிகள் குறித்து மக்களுக்கு இருக்கும் மற்றொரு அச்சம் பாராளுமன்றக் கலைப்புத் தொடர்பானது.நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைத்து, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டால் இந்தச் சமாதான முயற்சிகள் சீர்குலைந்து மீண்டும் போர் வெடித்துவிடும் என்கின்ற தொரு அச்சம் அவர்களுக்கு இருக்கிறது.ஆனால் கள நிலைமைகள் அவ்வாறானதாக இல்லை.

தற்போதுள்ள நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் மூலமாகவோ,அன்றி அரசியலமைப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தியோ தனக்குச் சார்பான ஒரு அரசை அமைக்கக்கூடிய ஏதுநிலைகள் சந்திரிகாவுக்கு குறைவென்றே கூறவேண்டும்.அப்படியே அவர் செய்துவிட்டாலும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளைக் குழப்புவதென்பது சாத்தியமான காரியமல்ல.

கடந்தகாலங்களைப் போலன்றி இம்முறை இந்தச் சமாதான முயற்சிகள் சர்வதேச நாடுகளின் அனுசரணையுடனே மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.மத்தியஸ்தம் வகிக்கும் நோர்வே மட்டுமன்றி, அமெரிக்கா,ஜப்பான்,பிரித்தானியா என பல நாடுகளும் இந்த விவகாரத்தில் தற்போது அக்கறை எடுத்துக் கொண்டுள்ளன.கடந்த காலங்களில் புலிகள் தொடர்பாக தாம் கொண்டிருந்த நிலைப்பாட்டையும் தற்போது இந்த நாடுகள் மாற்றிக் கொண்டுள்ளன. எந்தவகையிலும் இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் இன்று அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது(இது அவர்களுடைய நலன்சார்ந்ததாக இருந்தாலும்).இதன் காரணமாகவே பொருளாதார நிலையில் சீர்குலைந்து போயுள்ள இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதாயின் போரை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதான முயற்சிகளை முன்னெடுங்கள் என்று அவை வலியுறுத்திவருகின்றன.

ஏதோ ஒரு வகையில் ஆட்சி மாறினாலும்,இந்த நாடுகளின் பொருளாதார உதவியின்றி எவராலும் தற்போது இலங்கையில் ஆட்சியைக் கொண்டுநடத்த முடியாது.எனவே தவிர்க்கமுடியாதபடி இந்தச் சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கே புதிய அரசும்முயல வேண்டியிருக்கும்.தற்போது சர்வதேச விவகாரம் ஆக்கப்பட்டுவிட்ட இலங்கை இனச்சிக்கலை இனி இலங்கை அரசு தான் நினைத்தபடி அவ்வளவு சுலபத்தில் கையாண்டுவிடமுடியாது என்பதே களநிலை யதார்த்தம். ■

**19-02-2002 வன்னியை விட்டு நான் புறப்படும் பொழுது அன்று விடிந்தது. நேற்றுச்சொன்னபடி நந்தா எட்டு மணிக்கு வந்து விட்டாள். தென்னைகள் சூழ்ந்து இருந்த அந்த வளவினுள் பிரவேசிக்கிறோம். வணக்கம் வாங்கோ...! எங்களை வரவேற்ற அந்தப்பெண் போராளிகளுடன் உரையாடியபடி நிற்கிறோம்...**

# தாய்மடி வாசம் 12

" இஞ்ச இருக்கிற ஒவ்வொரு போராளியும் தன்னுடைய ஒரு அங்கத்தைக் கொடுத்தவை"

சொன்னாள் அந்தப் போராளி.

"இவையளைப் பராமரிக்கிறது ஆர்?"

"ஒவ்வொருதரோடையும் ஒண்டா இருக்கிறவை தான் பாக்கினம்"

களங்களில் எதிரியின் வரவை நிறுத்தி தாயகக் கனவோடு காத்திருந்தவர்கள். ஓ... இந்த மண்ணில் நாம் எல்லாம் சுதந்திரமாக வாழ தங்களது



அங்கங்களைக்கொடுத்து விட்டிருக்கும் குருத்துக்கள் வாழும் கோயிலல்லவா இது...! ஊருடன் வாழும் இனிய காலங்களைத் தூக்கி எறிந்து விட்டு உயிர் முழுவதும் தமிழீழ விடுதலை மட்டுமே சுமந்து உறவுகளை மறந்து உயிரை வெறுத்து மொத்தத்தில் தங்களது ஆசை, பாசம், விருப்பு, வெறுப்பு அனைத்தையும் மறந்து களம் வந்த அர்ச்சுனர்கள் இவர்கள். அந்த அன்பின் இனியவர்களை சந்திக்கும் அந்த நிமிடத்திற்காக காத்திருக்கிறோம்.

ஆண் போராளிகள் ஒரு வரிசையாகவும், பெண் போராளிகள் ஒரு வரிசையாகவும் போய்க்கொண்டிருந்தார்கள்.

" எங்கை போகினம்?"

கேட்ட எனக்கு நந்தா சொன்னாள் "உறுதி மொழியெடுக்கப் போகினம்"! ஒரே நிறத்தில் உடுப்புக்கள். பார்க்கப் பாடசாலை பிள்ளைகள் போல ஒழுங்காகப் போய்க்கொண்டிருந்தார்கள். எங்களுக்குச் சற்றுத் தள்ளி இருந்த இடத்தில் அனைவரும் போய் ஒழுங்காய் நின்று உறுதி மொழி எடுத்துக்கொள்கிறார்கள். என் கூட நின்ற அருள் நிலாவும் அவர்கள் நின்ற வரிசையில் கடைசியில் போய் நின்றுகொண்டார்கள்.

அடுத்திருந்த அந்தப்பெரிய கொட்டகைக்குள் வரிசையாகச் சென்று இருக்கைகளில் அமர்கிறார்கள் அந்தப்போராளிகள். அவர்களுக்கு நடுவே எனக்காகவும், நந்தாவுக்காகவும், அருள்நிலாவுக்காகவும் ஒவ்வொரு இருக்கைகள் காத்திருந்தன. எனக்கு அனைவரும் எழுந்து வணக்கம் சொன்னார்கள். பதிலுக்கு எனது வணக்கத்தையும் சொல்கிறேன்.

அந்த நிமிடங்களில் என் உயிர் சிலிர்கிறது. அந்தத் தங்கைளினதும், தம்பிகளினதும் அன்பில் நனைந்து அவர்களுள் ஒருத்தியாய் நான்.. உரையாடல்கள் ஆரம்பிக்கின்றன. துருதுருவென விழிகள், எல்லோருக்குள்ளும் முகம் நிறைந்த சிரிப்போடு கேள்விகள் கேட்ட அந்த வீல்செயரில் இருந்த தம்பி அடுத்துக்கேட்டான்

"எங்களைப்பற்றி அங்கே இருக்கிறவை என்னக்கா நினைக்கினம்...?"

புலத்தில் இந்தப்பிள்ளைகள் பற்றிய பொதுவான பார்வையை அவர்களுக்குச் சொல்ல அடுத்த வரிசையிலிருந்த பெண் போராளி சில புலத்து எழுத்தாளர்களின் பெயரைச் சொல்லிக்கேட்டாள்.

" விடுதலைப்புலிகள் பற்றியும் , எமது போராட்டம் பற்றியும் ஏன் அவையள் அப்படியான கருத்துக்கள் வச்சிருக்கினம்...?"

தனது கேள்வியுடன் நியாயமான எமது போராட்டம் பற்றியும், அதில் அவள் தனது நிலைப்பாட்டையும் சொன்னாள்.

ஓ.. தங்கையே உனது நியாயத்தை நான்

**சுதந்திரா**

புரிந்து கொள்கிறேன். உங்களது தியாகத்தை நான் புரிந்து கொள்கிறேன். பண்டாரவன்னியன் பிறந்த இதே மண்ணில் தானே காக்கைவன்னியனும் உருவானான்...?

அவர்களுடனான உரையாடல் தொடர்கிறது. ஒவ்வொருவரும் தங்களுக்குள் இருந்த எழுந்த அத்தனை உணர்வுகளையும் கேட்டார்கள். இந்த வன்னிக்குள் வரும் போது தனியே வந்த நான் இன்று சொந்தங்களைச் சேர்த்து விட்டேன். என் உறவான அவர்களுடன் புலத்தில் காசுமரங்களாய் நாம் இருக்கும் அவலங்களையும் பகிர்ந்து கொள்கிறேன். எனது பத்து வருட புலத்து அனுபவங்கள், வலிகள், துயர்கள் என அனைத்தையும் பகிர்ந்து கொள்கிறேன். பத்து வருடமாய் கட்டி வைத்திருந்த என் துயர்களெல்லாம் கரைந்து நான் மேகக்கூட்டங்களின் நடுவே உலாவருவதாய் ஒரு உணர்வு. அது அவர்கள் தந்த வார்த்தைகளில் இருந்தும், உறவிலிருந்தும் என் வாழ்தல் மீதான நம்பிக்கையும், பிடிப்பும் அந்தத் தம்பிகளின், தங்கைகளின் அன்பிலிருந்து என் உளம் நோக்கி வந்து புகுந்து கொள்கிறது.

மின்னலாய் 2 மணித்தியாலம் கரைந்து விடுகிறது. அந்தப் பிள்ளைகளில் என்னுள் அடிக்கடி வந்து போகும் ஒரு தம்பியாய்.... அந்த வீல்செயரிலிருந்த தம்பி கேட்டான்

"எங்களுக்காக நீங்களென்னக்கா செய்யப் போறீர்கள்...?"

"என்னால் முடிந்த அனைத்தும் உங்களுக்காகச் செய்வேன்."

இந்தத்தம்பியின் வார்த்தைகள் ஒவ்வொரு தமிழனையும் கேட்பதாயிருந்தது எனக்கு. அங்கிருந்து விதண்டாவாதம் பேசும் ஒவ்வொரு விதண்டாவாத எழுத்தாளரையும், விலாசக்கவி படைக்கும் விலாசங்களையும் கூட்டிவந்து இவன் முன் நிறுத்த வேண்டும். இவனது முகத்தைப் பார்த்து விட்டால், இவனுடன் பேசிவிட்டால் அந்தக் கற்களும் சிலவேளை கசியலாம். இரும்புகளென்ன இமயமே இவர்கள் முன் வந்தால் உருகியே போகும். சுயநலமற்ற இந்தச் செல்வங்களின் அன்பில் நனைய முற்பிறப்பில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

அவர்களிடமிருந்து விடைபெறும் நேரமது. "இண்டைக்குப் பின்னேரம் வெளிக்கிடப் போறன். அடுத்தமுறை வரேக்கை யாழ்ப்பாணத்திலை சந்திப்பமா...? இல்லது வன்னியிலையா..?" கேட்ட எனக்குச் சொன்னார்கள்.


"யாழ்ப்பாணத்திலை சந்திப் பமக்கா."

அவர்களிடமிருந்து வந்த அந்த உறுதியான வார்த்தை தமிழீழமே வந்துவிட்டாற் போன்றதொரு உணர்வையும் நிறைவையும் தந்தது. அனைவரும் எழுந்து நின்று எனக்கு விடைதந்தார்கள்.

*ஓ...என் அன்புத்தம்பிகளே...*
*என் அன்புத்தங்கைகளே...*
*போகிறேன்.*
*உங்களதும் உங்களைப் போன்ற*
*அனைத்து உறவுகளின் நினைவோடும்*
*போகிறேன்.*

*மீண்டும் இம்மண் நான் வரும்வரையில்*
*நீங்களெல்லாம் நலமாயிருக்க வேண்டும்*
*போகிறேன்.*

*என் நினைவுகளை நிறைத்திருக்கும்*
*வீல்செயர் தம்பியே உன் பெயர் தெரியாது*
*உன் சிரிப்பும் உன் கதையும் நெஞ்செலாம்*
*என் தம்பியை நினைவுபடுத்துகிறது*
*போகின்றேன் என் அன்புத் தம்பியே...*



*அக்கா என்றழைத்து - என்*
*ஆவிமுட்ட நிறைந்தாரே!*
*உங்கள் உருவங்கள்,*
*உணர்வுமிகு பேச்சுக்கள்,*
*இன்னுமின்னும்*
*உங்களுடன் கழிந்த இந்த இனிய பொழுது...*
*எல்லாமே... எல்லாமே...*
*என் நெஞ்சில்...*

*போகிறேன்.*
*இமை நிறையும் நீர்த்துளிகள்*
*இதோ விழுந்து விடுவேன் எனும் கணக்கில்*
*உங்களைப்பிரிய மனமின்றி*
*உள்ளூறங்கும் இதயம் அழுகிறது.*
*போகிறேன்...*

*அண்ணையைக் கண்டால்*
*நீங்கள் அடையும் ஆனந்தம்*
*எத்தனையோ அத்தனை ஆனந்தம்*
*உங்களைக்கண்டதில்,*
*உங்களுடன் உறவாடியதில்,*
*உங்களுடனான இந்த மணித்துளிகள்*
*போதுமிவை நான்*
*புலத்தில் வாழ்ந்திடப்போதுமிவை.*

*இன்று போகிறேன்*
*மீண்டும் வருவேன்*
*உங்களுடனும்*
*இந்த மண்ணுடனும் வாழந்திட - நான்*
*மீண்டும் வருவேன்*
*போகிறேன் இனியோரே...*

அவர்களிடமிருந்து விடைபெற்று அடுத்திருந்த கூடத்தில் சற்று நேரம்அருள்நிலா, நந்தா இன்னும் மூன்று பெண் போராளிகள் சேர்ந்து எமது உரையாடல் நடக்கிறது.

"நீங்கள் வாறீங்க என்ற உடனையும் கனக்க யோசிச்சமக்கா ஆனால்... இப்ப நீங்க போப்போறீங்க எண்டு நினைக்க கஸ்ரமாய் கிடக்கக்கா..."

சொன்னாள் நந்தா... இந்த ஐந்து நாளும் என் கூடவே அதிக நேரம் திரிந்தவள் நந்தா. என்னை விட ஒரு வயது தான் சிறியவள். அக்கா... அக்கா... என ஆயிரம் தடவைக்கு மேல் என்னை அழைத்திருப்பாள்.அமைதியாய் கதை சொல்லிச் சிரிக்கவைத்து என்னோடு அவள் பழகிய கணங்கள் ஒவ்வொன்றும் அவளைவிட்டுப் போகாதே... போகாதே... என இழுத்துப்பிடிப்பது போன்று இருந்தது அந்த வார்த்தைகள். இன்னும் சில பொழுது இவளுடன், இவளுடன் சேர்ந்த மற்றவர்களுடன் நின்று விட்டுப் போனால் என்னவென்று இருந்தது. ஆனால் எப்பவம்மா வருவீங்க...? என தினமும் கேட்கும் என் மகனின் குரல்... அனைத்தையும் தவிர்த்து விடுகிறது.

அந்தத் தென்னந்தோப்பு வளவை விட்டு வெளியேறுகிறோம். வாசல் வரையும் அருள்நிலா வந்து வழிஅனுப்பி வைக்கிறாள். அருள்நிலாவைத் திரும்பிப் பார்க்கும் தைரியம் என் கண்களுக்கு இல்லை. திரும்பிப் பார்க்காமல் நந்தாவின் சைக்கிளில் ஏறுகிறேன். என் நினைவெல்லாம் அந்தத் தென்னந்தோப்பில் சற்று நேரம் வரையும் உறவாடிய அந்தத்தம்பிகளும், தங்கைகளும் நிறைகிறார்கள்.

"அன்ரி நீங்கள் இண்டைக்கு போறீங்களே...?"

"ஆர் பிள்ளைக்குச் சொன்னது...?"


"அம்மா தான்"

என்றாள் 4வயது சுரபிக்குட்டி. இந்த வீட்டில் நின்ற இந்த ஐந்து நாளும் என் மகளை ஞாபகப்படுத்தி என்னைத் தன்வசமாய் வைத்திருந்தவள் சுரபி. தன் போராளித் தந்தை நினைவுகளை அடிக்கடி சொல்லியதும், தன் தந்தையின் வரவுக்காய் அவள் எவ்வளவு காத்திருக்கிறாள் என்பதைத் தன் அசைவு ஒவ்வொன்றாலும் விளக்கியவள். வணங்கப்படவேண்டிய மதுராவின் குடும்பத்தில் முதல் விளக்கு சுரபி. அடுத்து ராகவன் குட்டி. அவனுக்கு எனது பயணம் எதுவும் புரியும் வயசில்லை. ஆனால் தன் பட்டுக்கரங்களால் என் கைகளைப்பிடித்து வைத்துக்கொண்டிருந்தான்.

மதுராவின் முகத்தில் அன்று பெரிதாக கலகலப்பு இல்லை. எங்களை வழியனுப்பும் அவசரமாய் வேலைகள் செய்தபடி... அடிக்கடி வந்து என்னை மறந்திடுவீங்களே... எனக்கேட்டுக்கொண்டிருந்தது மனசில் பெரியதொரு சுமையை ஏற்றி வைத்திருந்தது. லதாக்கா வழமைபோல் அமைதியாய் இருந்தா... மறக்காமல் கடிதம் போடும் என சுதான்ரி தன் எதிர்பார்ப்பையும் சொன்னா. முற்றத்தில் நின்ற கோப்பி மரத்தில் குரங்குகள் மூன்று வந்திருந்து கோப்பி மரக்கொப்புகளை முறித்துக்கொட்டியது. **தொடரும்...**



# சிறுகதை



# A-9 அல்லது துருவ நட்சத்திரம்

## நந்தா

நீண்ட வெளிகளையும், உயர்ந்து நின்ற பனைமரங்களையும் தாண்டி அந்த பஸ் யாழ்ப்பாணத்துக்கான பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணித்துக் கொண்டிருந்தது. எல்லோருடைய முகங்களிலும் சந்தோசப் பெருமிதம்! இருக்காதா பின்னே! எவ்வளவு துன்ப, துயரத்துக்குப் பின்னர் இந்த வழிதிறக்கப்பட்டிருக்கின்றது. முறிகண்டிப்பிள்ளையார் கோயிலடியில் பஸ் நிறுத்தப்பட்டது. மக்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு பிள்ளையாருக்கு தேங்காய் உடைத்துக் கொண்டிருந்தனர். பிள்ளையார் எப்போதும் போல் முகத்தில் ஒளியுடன் எவ்வித சலனமும் இன்றி கல்லாகச் சமைந்திருந்தார். முந்தியொருமுறை நானும் அக்காவும், ஐயாவும் இவ்வழியால் வற்றாப்பளைக்குப் போயிருந்தோம். ஐயா ராசாத்தி அக்காவுக்கும், எனக்கும் தேங்காய் வேண்டித்தந்தார். அதை உடைக்கமாட்டாமல் ராசாத்தி அக்கா பேந்தப் பேந்த முழித்தது நினைவுக்கு வருகின்றது. இப்போது நினைவு அறுகின்றது. பஸ் புறப்பட ஆயத்தமானது. எனது கண்கள் பஸ் கண்ணாடிக்கு வெளியே நீண்டு விரிந்த வானத்தில் எதையோ தேடியது. அது இப்போது எனக்குத் தெரியாது. எனினும் வடக்குவானத்தின் அடியில் அவ்வெறுமையான இடத்தை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தேன். அதுதான் பொலாரிஸ் எனப்படுகின்ற துருவ நட்சத்திரம். ஏழாம் வகுப்பில் விஞ்ஞான வாத்தியார் படிப்பித்ததை ராசாத்தியக்கா தான் ஒரு நாள் இரவு மணல் முற்றத்தில் வைத்துக் காட்டித்தந்தாள் என்னைவிட மூன்று வகுப்புத்தான் கூடப்படிக்கின்ற போதிலும் வான சாஸ்திரம் எல்லாம் அவளுக்கு அத்துப்படி "அக்கா" இந்த நட்சத்திரத்திற்கு என்ன முக்கியத்துவம் அறியும் ஆர்வம் என்னைச் சும்மாவிடாது. "தம்பி" இது வடக்குத் திசையில் இருக்கிற பிரகாசமான வழிகாட்டி. மாலுமிகள், மீனவர்கள் வழிதவறியோருக்கு இது வழிகாட்டி உதவும் என்பாள். அதற்குப்பிறகு நான் துருவ நட்சத்திரம் பார்க்காமல் உறங்குவதில்லை. இப்போது பஸ் கிளிநொச்சியை அடைகிறது. உடைந்து சிதைந்த நகரமாக இருப்பினும் விடுதலை பெற்ற சுதந்திர மனிதர்கள் நடமாடும் சுதந்திர பூமியாக அது நிமிர்ந்து நிற்கிறது.

■■■

சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்பு ஐயாவும், நானும் கப்பலில் திருகோணமலை வந்திறங்கினோம். முடிவுதெரிந்த ஐயாவின் பயணத்துக்குத் துணையாக நானும் கூடவே... காலம் முழுதும் எங்களுக்காய் உழைத்து குடியோ, புகைப் பழக்கமோ இன்றி இருந்த ஐயாவுக்கு இதுவேன் வந்தது ....? நாங்கள் இடிந்து தான் போய்விட்டோம். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் ஒவ்வொரு நொடியும் ஐயா செத்துக் கொண்டிருந்தார். நேராகப் பஸ் எடுத்து மகரகமவுக்குச் சென்றோம். தொண்டைவரை பரவிவிட்ட புற்றுநோயை யாரால்தான் குணமாக்க முடியும்...? ஒரு ஈ, காக்காய்க்கும் தீங்கு நினைக்காத ஐயாவுக்கு ஏன் கடவுள் இத்தண்டனையைக் கொடுத்தார்...? நல்லவர்களை கடவுள்தான் பூமியில் அதிககாலம் விடமாட்டாரோ! என்னவோ....! கான்சர் யூனிற்றில் 28ஆம் கட்டிலில் ஐயா காலை நீட்டிப் படுத்திருந்தார். அவரின் தலைமாட்டில் இருந்து கொண்டு குளுக்கோசை தண்ணீரில் கரைச்சு வாயில் விட்டுக் கொண்டிருந்தேன். கொஞ்சம் வாயினுள்ளும் கொஞ்சம் கடவாய் வழியே வழிவதுமாய்.... "ஐயா" என்னையறியாமல் விம்மினேன். ஐயாவால் கதைக்க முடியவில்லை. ஆனாலும் ஆதரவாக என் தலையைத் தடவினார். அவரின் கண்களில் கண்ணீா கன்னத்தினூடு கோடாய் வழிந்தது. மரணம் என்பது பாசங்களைப் பிரிக்கின்ற கடவுளால் விதிக்கப்பட்ட மிகக் கொடுமையான ஒன்று என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. ஆனாலும் சாவுவரப்போகிறது.... வரப்போகிறது என்று கணமும் எதிர்கொள்ளும் சாவு சற்று வித்தியாசமானதுதான். வரும் போது அம்மாவையும் கூட்டிக் கொண்டுவருவதாகவே இருந்தது. ஆனாலும் எங்கள் குடும்பவறுமை அதற்கு இடம் கொடுக்கவில்லை. சாதாரண குடும்பங்களால் ஆயிரத்தி எண்ணூறு ரூபா கட்டி கப்பலில் வர முடியுமா? என்ன.... இந்தப் பாதையைத் திறந்தால் எவ்வளவு மக்களின் கஸ்ரங்கள் தீரும்? நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

"தம்பி" அனுங்கலான குரலில் ஐயா கூப்பிட்டார். அவரின் முகம் இப்போது சலனமற்றுக் கிடந்தது. கண்களைச் செருகிக் கொண்டே, "தம்பி" ராசாத்தியைப் பாக்காமலேயே நான் போய் விடுவனோடா! நெஞ்சின் துயரம் வார்த்தைகளாய் வெளிப்பட்டன. ராசாத்தி அக்காவைப் பாக்காமலேயே தன் உயிர் பிரியப் போகிறதே என ஐயாவின் உள்மனம் ஏங்குவது எனக்குத் தெரியாதது அல்ல ஆனாலும் அவள் இங்கு வருவதோ அல்லது ஐயாவைப் பார்ப்பதோ சற்றேனும் சாத்தியமில்லை. தான் பெற்ற குஞ்சுகளைக் காணாமல் இறந்து போகும் துயரத்தை எந்தப் பெற்றோர்கள் தான் தாங்குவார்கள்.....? இப்போது ஐயாவின் உடல் மேலும் கீழும் விம்மத் தொடங்கியது. மெலிந்த அவரின் கைகள் மட்டும் என்னை இறுக்கிக் கொண்டது. மொழி தெரியாத அந்த இடத்தில் யாரைத் துணைக்கு அழைப்பது...?

"தம்பி" கவனமடா அம்மாவும்.... அக்காவும்..... நெஞ்சை அடைக்கும் துயரம் நடந்தே விட்டது. ஐயாவின் மூச்சு இறுதியில் நிரந்தரமாக நின்றே விட்டது! ஆனாலும் அவரின் கைகள் என் இடது கையை இறுக்கப் பிடித்துக் கொண்டிருந்தன. இறுதி நேரத்திலும் அம்மாவையும், அக்காவையும் நினைத்துக் கொண்டா உயிரை விட்டிருக்கிறது ஐயாவின் ஜீவன். நெஞ்சைப் பிளக்கும் துக்கம் கண்ணீராக கீழே சிந்தியது. எல்லாம் முடிந்துவிட்டது. இனியென்ன செய்வது...? பெட்டி எடுப்பதற்கு மூவாயிரம் போய்விட்டது. மிகுதியாக ஏழாயிரம் மட்டுமே கையில் இருந்தது. அப்பாவை எப்படி யாழ்ப்பாணத்துக்கு கொண்டு போவது...? தரைப்பாதையும் கடற்பாதையும் நிறுத்தப்பட்டு நாடு யுத்த மேகங்களால் சூழப்பட்டிருந்த கொடியகாலமது. எப்படியாவது ஐயாவை ஊருக்குக் கொண்டு போய் விட வேண்டும்...? தான் பிறந்த ஊரான ஆழியவளை மண்ணிலேயே தனது கட்டைவேக வேண்டுமென அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். ஆனால் யுத்தத்தினால் சமாதானம் காணுகின்ற ஆட்சியாளர்களின் தரை வழிப் பாதையும் மூடிக் கிடக்கின்றதே! ஒருவாறாக விமானிக்கற் எடுக்கும் இடத்துக்கு தனியாகச் சென்றேன். கியூவில் நின்ற ஒருவரிடம் விசாரித்த போது தான் என் நிலை எனக்குப் புரிந்தது. பிரேதத்தைக் கொண்டு செல்ல பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதியோடு பணமாக இருபதினாயிரமும் தேவை என்று. இங்கு காசையாரிடம் நான் கேட்பது...? இந்த அந்நிய ஊரில் யார் எனக்கு உதவுவார்கள்..? பலவித சிந்தனைகளினூடு பஸ் நிலையத்துக்குச் சென்றேன். அதற்குமுன்னால் படை வாகனமொன்று பலருடன் நின்று கொண்டிருந்தது. என்மன நிலையில் எதையும் அவதானிக்கும்நிலை என்னிடமில்லை. திடீரென பெரிய வெடியோசையுடன் குண்டு வெடிக்கும் சத்தம் காதைப் பிளந்து குண்டின் அதிர்வில் நிலத்தில் தூக்கி வீசப்பட்ட நான் மெதுவாக நிமிர்ந்து பார்த்த போது புகைமண்டலம் எங்கும் சூழ்ந்திருந்தது. சனங்கள் கத்திய வண்ணம் அங்குமிங்கும் சிதறி ஓடிக் கொண்டிருந்தனர். நிலைமை மோசமடைய முன் எழுந்து எதிர்ப்புறமாக ஓட முயற்சித்தபோது இருகைகள் என்னை இறுகிப்பிடித்தன. நான்... நான்... எனது பேச்சைக் கேட்காமலேயே எனது கைகள் கட்டப்பட்டு ட்றக் ஒன்றில் தள்ளப்பட்டேன். நடந்த கலவரத்தில் எனது ஐசியும் தொலைந்து விட்டது. அநாதையாகப் பிணவறையில்க் கிடக்கும் ஐயா,... செய்யாத குற்றத்துக்காக சிறையில் அடைபடப் போகும் மகன்... ஊரில் தனிமரமாக இருக்கும் அம்மா... எதையும் அறியாமல் எங்கோ இருக்கும் அக்கா...

■■■

காலம் தன் பாட்டில் ஓடிக் கொண்டிருக்கின்றது. அதுயாருக்காகவும் காத்து நிற்பதில்லை. அந்த இருண்ட சிறைக்குள் ஒரு மூலைக்குள் சுவரில் சாய்ந்து கொண்டு மேலே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அருகருகே சந்திரன், நேசன், வரதன், கோபி... முடங்கிக் கொண்டு படுத்திருந்தனர். நுளம்புகள் குத்தும் போது சந்திரன் சடக்சடக் என அடிக்கும் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. மெல்ல எழுந்து சிறைக் கம்பிகளினூடு வெளியே பார்த்தேன். உறக்கத்தைத் தொலைத்து எவ்வளவு நாளாகின்றது... இனம்புரியாத சோகம் நெஞ்சை அடைத்தது. இன்னும் எத்தனை நாட்கள் இந்த விசாரணை இல்லாத சிறைவாழ்க்கை. போன கிழமைதான் அம்மா யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு வந்தா. குழிவிழுந்த கண்களுடன் "தம்பி ராசா" என அம்மா தடவியபோது அம்மாவின் மடியில் விழுந்து விம்மி விம்மி அழுதேன்... தம்பிஅழாதையடா" சேலைத் தலைப்பால் எனது கண்களைத் துடைத்து விட்டா. அநாதைப் பிணமெண்டு ஆரும் பொறுப்பெடுக்க இல்லை யெண்டு ஐயாவை அரசாங்கச் செலவிலை இஞ்சை எரிச்சுப் போட்டினமாம். "தம்பி" நாங்கள் எல்லாரும் இருந்தும் அநாதைப் பிணமா கொள்ளி கூட வைக்காமல் எரிச்சுப் போட்டாங்கள். அம்மாவின் நா தழுதழுத்தது. எனக்கு நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது. ஐயாவினை இறுதியாகப் பார்த்து கொள்ளி போடக்கூட எனக்குக் கொடுத்துவைக்கவில்லையே...! நினைவு அறுந்தது. வெளியே வடக்கு வானத்தை உற்றுப்பார்த்தேன். அக்காவின் துருவ நட்சத்திரம் தெளிவாகத் தெரிந்தது. மின்னி மின்னி அழகாக ஜெரலித்தது. உள்ளே வந்து கைவிளக்கைக் கொழுத்தி வைத்து விட்டு அக்காவின் கடிதத்தினை எடுத்து மீண்டும் வாசிக்கத் தொடங்கினேன்.

மல்லாவி
10/03/2001

அன்புடன் தம்பிக்கு,

நலம் உனது நலத்துக்கு மண்டலாய்ப் பிள்ளையார் துணை. தம்பி உன்னைப் பார்க்க வேண்டுமெண்டு சரியான விருப்பமாயிருக்கிறன். உன்னால உந்த வாழ்க்கையைத் தாங்கேலாதெண்டு எனக்குத் தெரியும். மனத்தைரியமா இரு. ஐயான்ர செய்தி அம்மாவின் கடிதம் மூலம் அறிந்து கொண்டேன். தாங்கமுடியவில்லையடா தம்பி. ஐயாவின்ர தோளில நீயும் நானும் ஏறிக் கொண்டு கடற்கரை மணலில உருண்டு விளையாடின காலங்கள் இனி வருமா..? கடைசியா எங்கையோ அந்நிய மண்ணில் அநாதையா எரிஞ்சு போயிட்டார். அம்மா கடிதத்தில என்னை விலத்திவரச் சொல்லி எழுதி இருந்தா இந்நிலையில் விலத்துறதைப்பற்றி யோசிக்கேலாது. எங்கட சனம் கஸ்ரம் இல்லாமல் பிரயாணம் செய்யவும், நாங்கள் சந்தோசமாக ஊருக்குப் போகும் காலம் மட்டும் நான் அதைப் பற்றி யோசிக்க மாட்டன். இந்த ஆனையிறவுப் பாதை திறந்திருந்தால் ஏன் ஐயா அநாதைப் பிணமா எரிஞ்சிருக்க வேணும். உனக்கு விடுதலை கிடைக்க வேண்டுமெண்டு அக்கா மண்டாடுறன்ரா. இப்பவும் துருவநட்சத்திரம் பார்க்கிறனியோ...! அக்காவின்ர ஞாபகம் வந்தால் அதைப்பார் பதிலை எதிர்பார்க்கும் உனதன்பின் "ராசாத்தி அக்கா"

நேரம் 1 மணியைத் தாண்டி இருந்தது. வெளியே இருள் மூடி இருந்தது. சந்திரன் தொடர்ந்து நுளம்பை அடிப்பதும் படுப்பதுமாய் புரண்டு கொண்டிருந்தான். எனது போர்வையை அவனில் மூடிவிட்டு சுவரில் சாய்ந்து கொண்டேன். பஸ் பறப்பட்டு விட்டது. எனது உணர்வுகள் பழைய சம்பவங்களை அசைபோடுவதை நிறுத்தியது. நடந்து முடிந்தவை கசப்பானவைஆனாலும் மறந்து தானே ஆகவேண்டும். அம்மாவைப் பார்த்துவிட்டு இரண்டு, மூன்று நாட்களில் மல்லாவிக்குப் போய் ராசாத்தி அக்காவையும் பார்க்க வேண்டும். எப்படிருக்கிறாளோ! கடைசியாக ஒரு கடித்ததுக்குப் பிறகு எந்தக் கடிதமும் மூன்றுமாதமாக இல்லை. பாரிய அழிவுகளைத் தாங்கிய தாய் பூமியூடு பஸ் பயணித்து சரியாக இரவு 7மணியளவில் பஸ் யாழ்ப்பாணத்தை அடைந்தது. ஆட்டோ ஒன்றைப் பிடித்து வீட்டுக்குப் போனபோது வீடு இருந்த இடம் தரை மட்டமாகிக் கிடந்தது. இந்தப் போர் உயிர்களை மட்டுமல்ல மரங்களையும், கட்டடங்களையும், விழுங்கி விட்டது. அருகில் இருந்த குடிசை வீட்டுக்குள் குப்பி விளக்கொன்று மின்னிக் கொண்டிருந்தது. "அம்மா" நான் தம்பி வந்திருக்கிறன். பாயில் இருந்து எழும்பிய அம்மாவின் கண்கள் பிரகாசமாயின. "தம்பி" என்றவாறு என்னை அணைத்துக் கொண்டாள். "எப்பதம்பி விட்டவங்கள்" "நேற்றுத் தான்" வெறுமையான எனது பதிலைக் கூடக் கவனிக்காமல் தண்ணி ஊற்றிய சோற்றைப் பிசைந்து வெண்காயத் தோடு பிசைந்து திரளையாக்கிக் கையில் வைத்தா அம்மா. முன்பு அக்காவுக்கும், எனக்கும் அம்மா பிசைந்து தரும் நிலாச் சோறு நினைவுக்கு வந்தது. "அம்மா" நான் நாளையிண்டைக்கு அக்காவைப் போய்ப் பாத்துட்டு வாறன். அவள் எப்படி இருக்கிறாளோஅம்மா...! கடிதம் வாறதோ அம்மா... அம்மா எங்கோ வெறித்துப் பார்த்துவிட்டு, "தம்பி" இனி அக்காவை நீ பாக்கேலாதடா! ஐயாவோட அவளும் போய்ச் சேந்திட்டாளடா "தம்பி" பொங்கிவந்த அழுகையை சேலைத்தலைப்பால் பொத்திக் கொண்டா. அழுதழுது கண்ணில் நீர் வற்றிவிட்டது போலும். என் நெஞ்சை கோடாரியால் யாரோ கொத்துவது போல் இருந்தது. இதயம் ராசாத்தி அக்காவுக்காக அழுதது. இறுதி நேரத்தில் இந்த ஆசைத் தம்பியை நினைத்திருப்பாளோ! சூட்கேசுக் குள் இருந்த படத்தில் அக்கா கம்பீரமாக இராணுவ உடையில் சிரித்துக் கொண்டிருந்தாள். கீழே ஆனையிறவு மீட்புச்சமரின் போது என எழுதி இருந்தது. எனது கண்ணிலிருந்து சொட்டுச் சொட்டாக கண்ணீர்த் துளிகள் அவளின் படத்தில்.... விழுந்தன. வெளியே முற்றத்துக்கு வந்தேன். இப்போது என் சோகத்தை அடக்கிக் கொண்டேன். அக்கா உயர்ந்த ஒரு இலட்சியத்துக்காகவே உயிரைத் தியாகம் செய்து போயிருக்கிறாள். எமது மக்கள் போக்குவரத்துக்கு தடையாக இருந்த இப்பாதையை திறப்பதற்கான சமரில் என் அக்காவும் பங்கு பற்றி இருந்தது எனக்குப் பெருமையாகவே இருந்தது. வானம் நட்சத்திரங்களால் பூத்திருந்தது. எனது கண்கள் வடக்குத்திசையில் அந்தத் துருவ நட்சத்திரத்தைத் தேடியது. மிகவும் பிரகாசமாக அது தன்பாட்டில் ஜொலித்துக் கொண்டிருந்தது. அதுதானே எல்லோருக்கும் வடக்குத் திசைக்கான வழிகாட்டி. அது போலத் தான் என் அக்காவும் இன்னும்.... இன்னும் ஆயிரம் ஆயிரம் வீரர்கள் சுதந்திரத்துக்கான வழி காட்டிகளாகி கல்லறைக்குள் உறங்குகின்றனர். இப்போதெல்லாம் அந்த நட்சத்திரத்தை ஒவ்வொருநாளும் பலமணி நேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருப்பேன். ஏனென்றால் ராசாத்தி அக்காவின் பாசமுகம் அதில் எனக்கு ஒவ்வொருநாளும் தெரிகின்றது. ✦

பாதுகாப்புக்குப் பக்கத்து வீட்டில் குடியிருப்பது தான் ஆபத்து. - தாமஸ்ஃபுப்ளர்.



# குறுங்கதைகள்



## தன்னை விடுவித்துக்கொண்டாள்

அந்தத திருமணம் நடந்தி ருக்கக்கூடாது தான். ஆனாலும் நடந்து விட்டது. இனி யாரைக் குறை கூறுவது?

வசந்தியின் தாய் மனதுக் குள் பொருமிக் கொண்டிருந்தாள்.

"தாரமும் குருவும் தலை விதிப்படி தான்'' சமாதானம் கூறினார் கலியாணத் தரகர்

சுடு தண்ணீர் குடித்த மாதிரி அங்கும் இங்கும் ஓடி ஓடி இளைத்துப் போன வசந்தியின் அண்ணன் பாலா தலையில் அடித் துக் கொண்டு அதிர்ந்து போய் உட் கார்ந்து விட்டான்.

வசந்தி விம்மி விம்மி அழுதுதீர்த்தாள். அதைத் தவிர அவளால் வேறு என்ன செய்ய முடியும்?

அவளது கணவன் கண் ணன் வாட்டசாட்டமான ஆள், சாரதி. அமைதியான சுபாவம். இனிமை யான உள்ளம். தீய பழக்கங்கள் இல்லை. நல்ல குடும்பத்துப் பிள்ளை. தாய் தந்தை இல்லை. சகோதரர்கள் வெளி நாட்டில். நல்ல சொத்துப்பத்து. இதெல்லாம் அவ னைப் பற்றிய விபரக் குறிப்புகள். தரகரால் முன் வைக்கப்பட்டன.

பாலா சம்மதித்து விட் டான். வசந்தியைக் கட்டி வைப்பதில் அவன் அக்கறையுடன் செயற் பட்டான். அவனது குடும்ப நிலையில் இப்படி ஒரு வரன் கிடைப்பது பெரும் பேறு எனக்கருதினான்.

தன்னால் முடிந்த வரை ஊரில் இருக்கும் சிறிய வீட்டுடன் ஒரு பரப்பு நிலமும் ஒரு இலட்சம் காசும் நகைகளும் தருவதாக ஒப்புக் கொண்டான்.

திருமணம் நல்ல படியாக நடந்தேறியது.

ஆறு மாதங்கள் கழிந்து போனது. அதற்கு மேல் அவர்களின் குடும்ப வாழ்வில் கீறல்கள் விழத் தொடங்கி விட்டன.

வசந்தி தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாளராக இருந்தாள். அவள் ஆண்களுடன் பழகுவதை அவனால் சீரணிக்க முடியவில்லை. வேலையிலிருந்து விலகுமாறு கட்டளை இட்டான். அவள் அதை ஏற்க மறுத்தாள்.

தினமும் குடிபோதையில் வருவான். அவள் மீது சந்தேகக் கணைகளை வீசுவான். அடிப்பான். உதைப்பான். மெல்ல எழுந்த புயல் சூறாவளியாகியது. அமைதி குலைந்தது. அவள் கருவுற்றிருந் தாள். அது கூட அவனுக்குச் சந்தேகமாக இருந்தது.

ஒருநாள், அவன்,

"ஆற்ரையோ குழந்தையைச் சுமந்து கொண்டிருக்கும் உனக்கு நானோடி கையெழுத்துப் போடுறது.''

அவளின் தலை அதிர்ந் தது. கீழே விழுந்தவள் கண் விழித்த போது கண்ணன் அங்கே இருக்கவில்லை.

"இனியும் இவனுடன் வாழ்க்கையா?"

அவள் நீதி மன்றத்தில் நின்றாள்.

விசாரணை தொடர்ந்தது. அவனது தொல்லைகளிலிருந்து விலகி வாழ விரும்பி இருப்பிடத்தை மாற்றினாள். அது இராணுவம் விட்டுச் சென்ற இடம்.


காணியைத் துப்புரவு செய்யத் தொடங்கினாள். காணியில் புதைத்து வைக்கப் பட்டிருந்த பொறி வெடி அவள் கண்களைத் தின்று தீர்த்தது.

பாலா எல்லாம் இழந்த நிலையில் தங்கையின் முன் கூனிக் குறுகி நின்றான். கண்ணன் ஏற் கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை என்ற உண்மையை எப்படித் தங்கையிடம் கூறுவான்.? பாலா வசந்தியின் கண் களைத் துடைத்தான்.

"அண்ணா என் குழந்தை க்கு அவன் தான் தந்தை என்பதை உறுதியாக்கினால் போதும் நீ கவலைப்படாதை. என்னாலை வாழ முடியும்''

அவள் தன்னை விடுவித்துக் கொண் டாள்.

**முருகு பாரிமகன்**



## என்னவளுக்கு..



தீவண்ணன்

வாழ்க்கை என்னும்
ஓடத்தில்
வழிவாகச் செல்வதற்கு
ஏற்றதொரு துணைதேடி
எத்தனைநாள் காத்திருந்தேன்.

பேரலைகள் அழித்தபோதும்
பெருங்காற்றுச் சுழித்தபோதும்
மாரிமழை பொழிந்தபோதும்
மனக்கலக்கம் சற்றுமின்றி
புரிந்துணர்வு பொங்கியெழ
ஓடம் கவிழாமல்
ஓர்மனதாய் செல்வதற்கு
ஏற்றதொரு துணைதேடி
என்மனமும் ஏங்கியது.

வைத்தகண் வாங்காமல்
என்னவளே
உனைப்பார்த்தேன்
காத்திருப்பின்
கனத்த பெறுமதியை
கணிக்கமுடியாமல்
பார்த்தவிழி பூத்திருந்தேன்.

நாட்டிற்கு நிறைய
நல்பணி செய்வதற்கு
ஏற்ற துணையாக
உனை நினைத்தேன்
உனக்கும் நான் துணையாவேன்

என்னவளின் வார்த்தை
வாழ்வாகுமென எண்ணி
எனது மனக்கடலை
உனக்குத் தந்துள்ளேன்
ஏற்ற பதிலொன்றை
எதிர்பார்த்துக் காத்துள்ளேன்
சாற்று!
சரியென்று சொல்லு
சிந்தனைகள் கலந்த
சிறந்த வாழ்வமைப்போம்.

## தாயும் குட்டியும்



'எவ்வளவு நாளைக்குத்தான் எனக்குப் பாலையே ஊட்டிக் கொண்டிருப்பாய்'' என்று தாய் நாயைப் பார்த்து கொஞ்சம் கடுப் போடு வினாவியது குட்டி நாய்.

அப்பனே அவசரப்படாதே, எப்போதுமே தெற்குப் பகுதியின் மிகவும் உயர்ந்த மனிதர்களோடு ஒட்டியிருப்பதன் மூலம் அட்டகாச மாய் உயிர் வாழலாம் என்னைப் போன்று.

ஒரு போதும் நீ அவர்களைப் பார்த்துக் குரைக்கக் கூடாது. சமயத்தில் அவர்கள் யாரைப்பார்த்து குரைக்கச் சொல்லுகிறார்களோ அப் போது மட்டும் குரைத்தால் போதும்.

மற்றும்படி அவையள் (உன்எஜமானர்கள்) கூறுவதற்கெல் லாம் வாலையாட்டினபடி இருந்தால் சரி. சலம்,மலம்,கூட அவர்கள் எதிர்பார்க்கிற மாதிரி அவர்களின் ஆலோசனைப்படிதான் விடவேணும்.

"பளிங்கு மாளிகையில் சுகீ சீவியம், உயர்ரகமான உணவு, குடிவகை, பிறகு அதன் மிச்ச சொச்சம், அவர்கள் கொட்டுகின்ற எலும்புகளில் இருக்கின்ற சதைப் பிடிப்பை உண்டாலே உடம்பு அந்த மாதிரிப் பெருக்கும் மகனே'' என்று பெருமிதமாய் அறிவுரை கூறியது தாடிக்கார தாய் நாய்.

வாயைப் பிளந்த குட்டி நாய்க்கு உமிழ்நீர் ஊறியூறி வடிந்து கொண்டி ருந்தது.

இந்தச் சம்பாசனையை செவி மடுத்த காற்று, மெல்லச் சொல்லி, நகைத்துக் கொண்டு போனது.

''தேனீர் கடையில் கை துடைப்பதற்காக கிழித்து வைத்தி ருக்கும் பேப்பர் துண்டுகள் மாதிரித்தான் இதுகளும் என்று''

**ஆவரங்கால் சுதன்.**

## முகம் இங்கே முகவரி எங்கே?

புன்னகைக்குள் புதிர்கள்,
புதுப்புது அர்த்தங்கள்.

முகவரி தெரியாத
முகமாய், அன்று.
சந்தித்தோம் -
சிரித்தோம், கதைத்தோம்.

யாரவன் என்று எம்முள்,
யாருக்கும் தெரியாது.
கதை பேசும் போது,
கண்களும் ஆமோதிக்கும்.
பழகிவிட்டோம் - கொஞ்சம்
இளகி விட்டோம்.
காற்றோடு பேசிக் கொண்டு
கைவீசி நடப்போம்.
சந்திகள் தோறும்
குந்தியே இருப்போம்.
நேற்றய படம் பற்றி
இன்று நாம் வாதிப்போம்.

ஏதோ அவனிடம்
ஈர்ப்பு இருந்தது,
இதயக் கால்கள் அவன்பின்
தானாய் நடந்தது.

பெயர் கேட்ட போது தான்,
பெயர் மாற்றிச் சொல்லி விட்டான்.
புரிகிறது இன்று!

நேற்றெரிந்த நெருப்பிலே.
காற்றறிந்து போனான்.
காலம் கடந்த பின்னே புரிகிறது,
'கந்தகப்பூ' அவன் என்று.

மாறாத புன்னகை.
மறவாத நினைவு.
முகம் மட்டும் அகத்திலே
முகவரி...?



வீ. ஜெயசீலன்

சாலையோரக்கதைகள் -02

## தனக்கு வந்தால் தெரியும்



நீண்ட தூரப் பயணம் ஒன்றுக்காக தன்னுள் பயணிகளை நிறைத்து, சாலைவழியே போய்க் கொண்டிருந்தது அந்தப் பேருந்து.

அதுவும், சாலையில் உள்ள பள்ளங்களில் தேங்கிநிற்கும் சேற்றுநீரை பாதசாரிகள் மீது பாய்ச்சியடித்த படி மிக வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

பேருந்தின் இயக்குநர் இருக்கையில் அமர்ந்திருந்த சாரதி, தான் புதிதாக வாங்கிய அந்தப் பேருந்தைப்பற்றி தனக்குப் பக்கத்தில் இருந்தவரிடம் உரையா டியபடி... சாலையில் செல்லும் பாதசாரிகளை எந்தவிதத்திலும் கவனம் கொள்ளாது அதைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

சுமார் மூன்று மணித்தி யால ஓட்டத்தின் பின்பு, சாப்பிடு வதற்காக ஓர் இடத்தில் சாரதி பேருந்தை நிறுத்தினான். பேருந்தின் கதவைத்திறந்து அவன் கீழே இறங்கிய போது... எதிரேவந்த மற்றொரு வாகனமொன்று சாலை யின் பள்ளத்தில் தேங்கி நின்ற சேற்று நீரை அவன் மீது வீசியடித்து விட்டுச் சென்று மறைந்தது.

"ஆரடா இவன்..? கொஞ் சம் கூட மனிதத்தன்மை இல்லாமல் இப்படிச் சேற்றுநீரை அடிச்சிட்டுப் போறான்..?

பேருந்தின் சாரதி அந்த நவீன வாகனக்காறனைத் திட்டி னான் சினம் பொங்க.

சாலையில் சிலர் அவனை அனுதாபத்தோடு பார்த்தனர்.

ஆனால்,"எதுவும் தனக்கு வந்தால் தான் தெரியும்..." என அப் பேருந்தினுள் ஒரு குரல் ஒலித்துக் கொண்டது பெரும் இகழ்ச்சியாக...

**அலெக்ஸ்பரந்தாமன்**

உண்மைப் பாசம் அனைத்திற்க்கும் பகைவன், சுயநலன். - டேஸிட்டஸ்.

# இளையநாதம்

## குட்டிக்கதை

## ஒற்றுமையே பலம்


ஒரு நாள் குதிரை யொன்று கழுதையிடம் சென்று ஏளனமாகக் கூறியது. 'எனக்கு உன்னைப் பார்க்கக் கவலை யாக உள்ளது. ஏன் தான் உனக்கு இவ்வளவு அசிங்க மான மூஞ்சியோ' என்று.

கழுதை "அழகு முகத்தில் அல்ல அகத்தில்' என்றது.

குதிரை "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பார்கள். அகம் அழகாக இல்லாததால் தான் உன் முகம் இவ்வளவு அசிங்கமாக உள்ளது என்றது.

கழுதை "பெட்டிப் பாம்பாகி" அவ்விடத்தை விட்டு நகர்ந்தது.

குதிரை மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருக்கையில் தோட்டம் ஒன்று கண்ணில் பட்டது. புகுந்து பயிரை மேய்ந்தது. தோட்டக்காரரும், மனைவியும் வருவதைக் குதிரை கண்டு கொள்ளவில்லை. தோட்டக்காரன் குதிரையைக் கண்டுவிட்டான். குதிரைக்கு முறையாக அடி கொடுத்து விரட்டினான்.



குதிரை கழுதையிடம் சென்று, "நான் தோட்டத்திற்குச் சென்றேன் தோட்டக்காரன் என் அழகில் மயங்கி எனக்கு விருந்து போட்டான்" என்றது.

கழுதை குதிரையின் காயத்தைக் கண்டு விட்டது. "எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டது.

"சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது" என்று தோட்டக்காரன் எண்ணியிருக்கையில் குதிரை மறுநாளும் தோட்டத்திற்குச் சென்று மேய்ந்தது.

இம்முறை தோடடக் காறன் குதிரையைப் பிடித்துக் கட்டிப் போட்டு விட்டான். குதிரை பயத்தில் அலறியது.

கழுதைக்குச் சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தது. குதிரை "ஆழமறியாமல் காலை விடாதே" என்பதை மறந்து மாட்டிக் கொண்டு விட்டது தெரிந்தது.

எலியை அழைத்து வந்து குதிரையைக் காப்பாற்றிச் சென்றது.

'ஒற்றுமையே பலம்' என்பதையும் கூறி வைத்தது.

கார் நட்சத்திரன்.

## வாரம் ஒரு குறள்



நாம் எல்லோரும் உரிய உரிய இடத்திலே இருந்து கொள்ள வேண்டும். உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் சில வேளை செய்யக் கூடாத காரியங்களைச் செய்வார்களேயானால் அவர்கள் மற்றவர்களால் தாழ்த்தப்பட நேரிடும். உதாரணமாக, எமது தலையில் இருக்கின்ற மயிரானது தலைக்குப் பாதுகாப்பை அளிக்கிறது. அதோடு முகத்திற்கு அழகையும் கொடுக்கிறது. ஆனால் அது தலையிலிருந்து கழன்று போகும் போது, அதையாரும் கவனிப்பதில்லை. அது குப்பையோடு குப்பையாகி விடுகிறது. இதே போலத்தான் ஒவ்வொருவரும் தமக்குரிய இடத்தில் இருந்து கொள்ளும் போது மதிப்பு ஏற்படுகிறது. அது தவறின் இகழ்வு வந்து சேர்கின்றது என்பதை,

"தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையினிழிந்தக் கடை."

என்ற குறள் மூலம் வள்ளுவர் தெளிவாக்கியுள்ளார்.

## வடிவம்

பூக்களின் அழகே சிரிப்பின் வடிவம்
நாய்களின் தோழமை நன்றியின் வடிவம்
எறும்புகளின் சுறுசுறுப்பு உழைப்பின் வடிவம்
காகத்தின் தந்திரம் ஒற்றுமையின் வடிவம்
அலையின் வீச்சே முயற்சியின் வடிவம்
கொக்கின் சாதுயமே பொறுமையின் வடிவம்
மரங்களின் கிளையே உதவியின் வடிவம்
மான்களின் வாழ்வே கற்பின் வடிவம்
யானையின் பருமனே பலத்தின் வடிவம்.

ந.இந்துஜா,
கிளி/பிரமந்தனாறு ம.வி.

## தெரிந்து கொள்ளுங்கள்

01. CCC -
கொழும்பு கிறிக்கெட் கழகம்- Colombo Cricket Club
02. CGR-
இலங்கைப் புகையிரத அதிகாரசபை- Ceylon Goverment Railway
03. GPO -
மத்திய தபாலகம்- General post Office
04. SLBC -
இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபனம்- Srilanka Broadcasting Corporation
05. SLTB - இலங்கை போக்குவரத்து சபை- Srilanka Transport Board

எம். எஸ். வரன
கிளிநொச்சி.

## பொதுஅறிவு


1) கம்யூனிசத்தின் தந்தை யார்?
கார்ல் மார்க்ஸ்
2) பூகம்பத்தை அளவிடும் கருவி எது?
றிச்ரர் அளவு கோல்
3) செஞ்சிலுவைச்சின்னத்தை தனது தேசியக் கொடியில் கொண்டுள்ள நாடு எது?
சுவிற்சிலாந்து.
4) அவுஸ்ரேலியாக் கண்டம் கண்டறியப்பட்ட ஆண்டு எது?
1788ம் ஆண்டு.
5) அமெரிக்கக் கண்டம் கண்டறியப்பட்ட ஆண்டு எது?
1492ஆம் ஆண்டு
6) உலகின் மிகப்பழமைவாய்ந்த செய்தி நிறுவனம் எது?
றொய்டர்.

இ. ராஜினி,
தரம் 11.

## அறிவியல் துறைகளின் தந்தையர்கள்..

கணக்கியலின் தந்தை – லுக்கா பெசயோலி
கணினியின் தந்தை – சாள்ஸ் பபேஜ்
அகிம்சையின் தந்தை – மகாத்மா காந்தி
சமூகவியலின் தந்தை – மாக்ஸ்கொப்ஸ் லெனின்

## நகைச்சுவை



ரீச்சர்:- டே! ராமு தாஜ்மஹால் எங்கு உள்ளது.
ராமு:- தெரியாது ரீச்சர்.
ரீச்சர்:- தெரியாதோ! ஏறடா மேசைக்கு மேலை.
ராமு:- ரீச்சர் ஏறியும் தெரியலங்க தாஜ்மஹால்.

இ.ராஜ்குமார்
மு/புதுக்குடியிருப்பு, ம.வி.

## நாடுகளும் அவற்றின் தலைநகரங்களும்

ஆப்கானிஸ்தான்
காபூல்

அல்பேனியா
டிரானா

அல்ஜீரியா
ஆப்ஜியர்ஸ்

அன்டோரா
அன்டோரி(லா)

ஆர்ஜென்டினா
புருனோ ஏர்ஸ்

அமெரிக்கா
வாஷிங்டன்

ஞா. அணரைசன்.

## குறுக்கெழுத்துப் போட்டி 08

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 07 | 08 | 09 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | |
| | 26 | | 28 | 29 | 30 |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம்**
01) யானைப்பாகன்
07) வருவாய்
11) குதிரையின் பிடரி மயிர் இடம் மாறியுள்ளது
14) இப்பிறவியில் செய்யும் புண்ணிய பாவங்கள்
19) சுற்றம் குழம்பியுள்ளது.
28) மழைக்கு எதிரானவை.
31) மாதங்களில் ஒன்று
33) தன்னலமற்ற கொடை

**மேலிருந்து கீழ்**
01) இடையூறு குழம்பியுள்ளது.
02) காடு குழம்பியுள்ளது.
09) இலைகளைத் தாங்குவது குழம்பியுள்ளது.
12) பிரணவ மந்திரம்.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

**குறுக்கெழுத்துப் போட்டி – 06 விடைகள்**

இடமிருந்து வலம்
01) அகிலம்
06) பூ
07) திருப்பதி
22) பகல்
32) வீணை

மேலிருந்து கீழ்
01) அதிசயம்
02) கிருபை
03) கலப்பை
04) பம்பரம்
11) தினகரன்
18) இல்லம்.
26) வீதி

பரிசுக்குரியவர்
தியாகராஜா கிருபாகரன்
யா/ஹாட்லிக்கல்லூரி பருத்தித்துறை.

பாராட்டுக்குரியவர்
நா.வதனன்
தரம் -9
மு/முல்லைத்தீவு ம.வி

கு.ஜசிந்தா
ஆலங்கேணி
பூநகரி.

கோ.செந்தூரன்
தரம்-11
கிளி/மத்திய கல்லூரி, கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி இல.07
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

ஆசை வைக்காவிடில், அல்லல் பட வேண்டியதில்லை. - லிஸரோ.

# ஆற்றல் நிறைந்த பெண்களின் ஆளுமைக்குப் பின்னால்

ஆதிலட்சுமி சிவகுமார்

**வீடு**, குடும்பம், சமூகம் என்கின்ற வரையறைக்குள் வாழ்ந்து பழகிவிட்ட பெண்களிற் கணிசமானோர் இந்த வரையறைகளைத் தாண்டி வெளிவந்துள்ளார்கள். இந்த வெளிவருதலோடு பெண்ணின் முன்னேற்றமும் வலுவடைந் திருக்கிறது என்பது உண்மை.

பெண்களின் வாழ்வு இப்போது முன்பு போலில்லை. அதாவது அடுப்படிதான் அந்தப்புரம் என்கின்ற காலத்தில் இல்லை. கல்வியில், தொழில் வாய்ப்பில், அரசியலில் கணிசமானளவு பங்கேற்பவர்களாக இருக்கின்றனர். உடல் வலுவிலும்சரி,உள ஆற்றலிலும்சரி தம்மை பெண்கள் நிலைநிறுத் தியிருக்கிறார்கள்.

பெண்களின் ஆற்றல், அறிவு, துணிச்சல், தன்னம்பிக்கை எல்லாமே இன்று எல்லாஇடங்களிலும் பரிணமிக்கின்றன. பெண்கள் இவற்றைத்தான் கற்கலாம், இந்த இந்தத் துறைகளில் தான் வேலை செய்யலாம் என்கின்ற மாயைகள் அறுந்து விட்டன. பெண்களின் உலகம் பரந்து விரிந்து விட்டது.

சகலதுறைகளிலும் இன்று பெண்கள் கற்பதையும், கடமைபுரிவதையும், நிர்வாகீதி யாக பிரகாசிப்பதையும் காண்கின்றோம். ஆனால் - இந்தஆற்றல் நிறைந்த, அறிவு மிகுந்த, ஆளுமை மிக்க பெண்கள் சிலரின் மறுபக்கங்களையும் நாம் சிந்திக்க வேண்டும்.

ஆற்றல், ஆளுமை, அறிவு மிக்க சில பெண்களுடன் மனம் விட்டு உரையாடிவிட்டு, மிகுந்த மனச்சுமையோடும் துயரத்தோடும் தான் இதை எழுத முடிகிறது.

தங்களிடமிருக்கும் அறிவை, ஆற்றலை, ஆளுமையை வெளிக்காட்டும் பெண் எப்படிப் பார்க்கப்படுகிறாள்? அவளின் முகத்துக்கு முன்னாலும் முதுகுக்குப் பின்னாலும் எத்தனை அடைமொழிகள்?! 'ஆண்மூச்சுப் பிடித்தவள்....அடங்காப்பிடாரி, நடத்தைகெட்டவள்' இப்படி எத்தனை வாய்கூசாத வார்த்தைகள்! தன்னம்பிக்கையோடு எதையும் துணிவுடன் எதிர்கொள்பவள் ஆண்மூச்சுப்பிடித்தவளாயும், எப்போதும் எதிலும் கொள்கையுடனிருப்பவள் அடங்காப்பிடாரியாயும். தன் கல்வி - தொழில் நிமித்தம் ஆண்களுடன் சரளமாகப் பேசுபவள் நடத்தை கெட்டவளாயும் கணிக்கப்படுகிறாள் - கதைக்கப்படுகிறாள்



இவற்றுக்கும் அப்பாற்பட்டு இன்னும் இன்னும் எத்தனையோ விபரிக்க முடியாத வார்த்தைகள்.

இன்றைய உலகில் பெண்களால் எத்தனையோ சாதனைகள் நிலைநாட்டப்பட்டு விட்டன. பெருமைக்கும், புகழுக்கும், பாராட்டுதல்களுக்கும் உரியவளாய் பெண் இருக்கின்றாள். விஞ்ஞானியாகியிருக்கின்றாள். விண்வெளிக்குச் சென்றிருக்கிறாள். விளையாட்டில் முத்திரை பதித்திருக்கிறாள். வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த பெண் இன்று வியப்புக்குரியவளாகி நிற்கிறாள். இருந்தும் -

ஆற்றலும், அறிவும், ஆளுமையும் கொண்ட பெண்களில் சிலரின் பின்னால் ஏக்கமும், ஆதங்கமும், வேதனையும், விரக்தியும் ஒட்டிக்கிடக்கின்றன.

'எங்களை ஏன் புரிந்து கொள்கிறார்கள் இல்லை?..'

'பெண் என்கின்ற ஒரே காரணத்துக்காக ஏன் இப்படி மன நெருக்குதலுக்கு உள்ளாகிறோம்?...'

என்று இவர்கள் விழிகசிந்து போகிறார்கள்.

'மனித ஆளுமை என்பது ஆண் - பெண் பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாற்பட்டது' என்பது எமது தேசியத் தலைவர் அவர்களின் கருத்து.

ஆற்றல் நிறைந்தவரையும் ஆளுமைப்பண்பு கொண்டவரையும் ஆணா பெண்ணா என்று வேறுபடுத்திப் பார்க்காத மனிதப்பண்பு எமது இன்றைய அடிப்படைத் தேவையாகி நிற்கிறது.

தம் மனக்கட்டுக்களை அறுத்துக் கொண்டு விடுதலையாகி வெளிவந்து அன்பையும், ஆற்றலையும், அறிவையும் சுமந்து நிற்கும் பெண்கள் துயரச்சுமைகளால் அழுத்தமுறக்கூடாது.

ஒரு சமூகம் விடிவு பெற சமூகத்தின் அங்கத்துவர் யாவரும் விழிப்புணர்வு பெற வேண்டும். பெண்களிடமும் பலவீனங்கள் இருக்கும். அந்தப் பலவீனங்களைச் சுட்டிக் காட்டி முன்னேற்றலாம். ஆனால் அந்தப் பலவீனங்களை அவளை விழுத்தும் ஆயுதமாகப் பயன்படுத்தி விடக்கூடாது. இன்னமும் மனவுலக அடிமைத்தளையிலிருந்து விடுபடாத, விடுபடமுடியாத சராசரிப் பெண்கள் இந்த அறிவு, ஆற்றல் ஆளுமை நிறைந்த பெண்களைப் பார்த்துப் பெருமைப்பட வேண்டும்.

இயலாமையுடன் வாழும் சில பெண்கள் இந்த முன்மாதிரியான பெண்களைப் பார்த்து நாமும் விடுதலை பெற்று அறிவு, ஆற்றல், ஆளுமை நிரம்பியவர்களாக வேண்டும் என்று எத்தனிக்கையில் ஆளுமை நிறைந்தவர்கள் துயரம் சுமப்பதை அறிந்து தமது சிந்தனைகளில் இருந்து பின் வாங்கி விடும் அபாயமும் ஏற்படவாய்ப்புண்டு.

ஒரு சகமனிதனிடம் அது ஆணாக இருந்தாலென்ன? பெண்ணாக இருந்தாலென்ன? ஏதாவது ஒரு திறமை அல்லது கெட்டித்தனம் தென்படுமேயானால் அதைத் தட்டிக் கொடுத்து. உற்சாகப்படுத்தி வளர்த்து விட வேண்டிய கடப்பாடு நம் எல்லோருக்குமே உரியது.

சில இடங்களில் பெண்ணின் ஆற்றல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பயப்படுகிறார்கள்.

'நல்லாப்படிப்பித்து விட்டால் பின்னாளில் சீதனத்துக்கு எங்கே போவது?....'

'நல்லாப் படிக்கவிட்டா பிறகு எங்கள மதிக்காயினம்....'

'வேலைக்குப் போனா இன்னும் றாங்கி கூடிவிடும்'

இப்படி ஏதாவதொன்றைக் கற்பனை செய்து... பெண்ணுக்கு மிகவும் பாரபட்சம் காட்டப்பட்டு விடுகிறது.

பெண்ணும் ஒரு மனிதப்பிறவிதான், அவளுக்குள்ளும் ஓர் அற்புதமான இதயம் உண்டு. அவளுக்கும், கனவுகள் எல்லாம் இருக்கிறது.

நாங்கள் பரஸ்பர புரிந்துணர்வோடு வாழக்கற்றுக் கொள்வோம். இது யாரையும் புண்படுத்துவதற்கல்ல. புண்பட்டவர்களின் மனமறிந்து வெளியாகும் ஆதங்கம்.

---

பன்முகம் - 10

# தலைதாழாக் கலை

**எப்பொழுதோ** ஒரு முறை ஆனந்த விகடன் சஞ்சிகையில் குறுங்கதை ஒன்றைப் படித்ததாக ஞாபகம்.

இரவு வேளையில், மலைப்பாதை ஒன்றில் மோட்டார் வாகனத்தில் ஒருவர் வந்து கொண்டிருந்த போது வாகனம் நடுவழியில் நின்றுவிட்டது. அவரும் இறங்கி தனக்குத் தெரிந்த வித்தைகளைச் செய்து பார்த்தார் இயந்திரம் இயங்க மறுத்தது.. எனவே வாகனத்தைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டுயாரும் திருத்துநர் கிடைக்கமாட்டாரா என்று தேடிப் புறப்பட்டார்.

நீண்ட தூரம் இறங்கி நடந்த பின்னர்ஒரு குடிசை ஒன்று தென்பட்டது. அங்கிருந்த முதியவரிடம் பிரச்சினையைக் கூறியபோது இன்னும் சற்றுத் தொலைவு போனால் வாகனம் திருத்தும் ஒருவர் இருக்கிறார் என்று வழியைக்காண்பித்தார். ஒருவாறு அவ்வீட்டைக் கண்டு பிடித்து விட்டார். தேடிச் சென்றவரும் அங்கிருக்கவே தன்நிலையை இவர் விளக்கிக் கூறினார்.

நேரமோ இருட்டு, இடமோ மலைச் சாரல், குளிர்வேறு என்றாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு உதவ வேண்டும் என்ற நல்ல மனதோடு அவரும் தனது ஆயுதங்களுடன் புறப்பட்டு வந்தார்.

வந்த திருத்துநர் இயந்திரப் பகுதியைத் திறந்து பார்த்தார். பின்னர் தன்னிடமிருந்த சுட்டியலால் ஏதோ ஒரு இடத்தில் இரண்டு தட்டுத்தட்டினார். அவ்வளவுதான் அவர் செய்த வேலை வாகனம் ஒரு பிரச்சினையும் இல்லாமல் இயங்க ஆரம்பித்தது.

வாகன உரிமையாளருக்கோ அளவற்ற மகிழ்ச்சி. உடனே தனது பையில் இருந்து பத்துரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினார். அதை வாங்க மறுத்த திருத்துநர் "நூறுரூபாய் கொடுங்கள்"என்றார்.

வாகனக்காறருக்கோ சற்றுக் கோபம் வந்து விட்டது "என்னய்யா இரண்டு தட்டுத்தானே தட்டினீர் அதற்குப்போய் நூறு ரூபாய் கேட்கிறீரே" - எனவும் திருத்துநர் கூறினார்.

"தட்டை வேண்டுமானால் இலவசமாக எடுத்துக்கொள்ளுங்கள் அதையாரும் தட்டலாம் ஆனால் எந்த இடத்தில் எப்படித் தட்ட வேண்டும் என்று எனக்குத்தான் தெரியும். அந்தத் திறமைக்குத்தான் நூறு ரூபாய்" என்றாராம்.

என்றோ படித்த இந்தக் கதை என்நினைவில்விட்டகலாமல் இருக்கின்றது என்றால் காரணம் அதில் சொல்லப்பட்ட செய்திதான். ஒவ்வொரு வருக்கும் தனித்தனி ஆற்றல் உண்டு. ஒருவர் ஒரு விடயத்தைச் செய்ய எடுக்கும் நேரத்துக்கும், செலவிடும் மூலப் பொருளுக்கும் கணக்கிட்டு அவருடைய ஆற்றலுக்கு விலை நிர்ணயிக்க முடியாது. அப்படி நிர்ணயிப்பது அழகுமல்ல.

ஒருநாள் முழுவதும் முயன்றும் கவிதையில் ஒருவரியைத் தானும் எழுதமுடியாமல் பலர் திணறும் போது ஒரு மணித்துளிக்குள் அற்புதமான பலவரிக் கவிதையை ஒரு கவிஞன் எழுதுகின்றான் என்றால் அதை அவன் எழுத எடுத்த நேரத்தையும், செலவிட்ட பேனாமை, காகிதத்தை வைத்து அதற்குப் பெறுமதியைக் கணக்கிட முடியாது.

ஆற்றல் மிக்கவன் தனது திறமையில் மதிப்பும், தன்னம்பிக்கையும் உள்ளவனாக இருக்க வேண்டும். இது விடயத்தில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பிரபல்யம் மிக்க ஓவியக்கலை ஞரான திரு.ஆ. இராசையா அவர்களை உதாரணமாகக் கொள்வதுண்டு.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரபல்யமான கல்லூரி ஒன்றின் நூற்றாண்டு விழா நடக்க ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. நூற்றாண்டு விழாவையொட்டி கல்லூரியின் படம் கொண்ட முத்திரையொன்றை வெளியிடுவதென்றும், அதற்கான படத்தை ஓவியர் ஆ. இராசையாவைக் கொண்டே வரைவிப்பதும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதிபர் ஓவியர் இராசையாவிடம் ஆளனுப்பினார். அவரும் ஓவியரின் வீட்டுப் படலையிலே நின்று கொண்டு ஓவியரை அழைத்து "நீங்கள் தானே ஓவியர் இராசையா? உங்களை அதிபர் வந்து சந்திக்கும்படி சொல்லி அனுப்பினார்."என்றார்.

"ஏன்? என்ன விடயமாம்?"

"ஏதோபடம் கீறும் விடயமாம்"

வந்தவரின் அந்தப் பதிலை கேட்டதும். ஓவியர் திரும்பிக் கேட்டார். அதிபருக்கு என்னிடம் அலுவலா? அல்லது எனக்கு அதிபரிடம் அலுவலா?"

வந்தவர் தயக்கத்துடன் கூறினார். "அவருக்கு உங்களிடம் தான் அலுவல்"

"அப்படியென்றால் அவரைவந்து என்னைச் சந்திக்கும்படி கூறும்" என்றபடி வீட்டுக்குள் திரும்பினார் - அதன்பிறகு நடந்த விடயங்கள் வேறு.

இதே போன்று யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய கல்வி நிறுவனம் ஒன்று ஒரு கல்வி மானின் உருவப்படம் ஒன்றை வரைய ஒப்பந்தம் செய்து கொண்டது. ஓவியரும் அதற்குச் சம்மதித்து படத்தை வரைய ஆரம்பித்து விட்டார். அதன் பிறகும் அந்த ஒப்பந்தக்காறர்கள் கூலி அதிகமாகிவிட்டது. பேசிய விலையில் இருந்து குறைக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டுக் கொண்டனர். அவரும் கேட்பவர்கள் பெரிய மனிதர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு சற்றுக் குறைத்தார். அப்படியிருந்தும் அவர்களுக் குத் திருப்தியளிப்பதாகவில்லை.

எனவே ஓவியர் அவர்களுக்குப் படம் வரைந்து கொடுக்கப்போவதில்லை என்ற தீர்மானத்துடன் வெளியேறினார். ரூபாய் ஐம்பதினாயிரம் ஒப்பந்தம் பேசப்பட்டு வரைய ஆரம்பித்த அப்படத்தின் விலையை, அதன் பெறுமதியைக் குறைப்பதை உண்மையான கலைஞன் அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தான் மறுப்பதால் ஏற்படக்கூடிய இழப்பையிட்டு அவர் கவலைப்படவுமில்லை. அந்தப் படத்தை தன் ஆத்மதிருப்திக்காக வரைந்து முடித்த அவர் அதனைச் சம்மந்தப் பட்டவர்களுக்குக் காண்பிக்கவுமில்லை. இவர்கள் கலையின் பெருமை பெறுமதி தெரியாதவர்கள் என்பது அவர்கருத்து.

அந்தப் படத்தை மற்றவர்கள் கண்ணில் படாதவாறு இன்றுவரை பேணிப் பாதுகாத்து வருகின்றார் அந்த தலை வணங்காக் கலைஞன்.

இத்தகைய கலைஞர்கள் பெருமைக்குரியவர்கள் மட்டுமல்ல. கலைகளே இவர்களால் பெருமை பெறுகின்றது.

நாவண்ணன்


# ஈராக் - ஒரு சோதனைக் களம்

**இமையவன்**

போர் எனும் சேவகன் மத்தியகிழக்கில் என்ன தீர்வைத் தரப்போகிறான்? உலகளாவிய கேள்வியிது.


மத்தியகிழக்கில், போர் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்தே செல்லுகின்றன.

ஈராக் அனுப்பப்பட்ட பேரழிப்பாயுதக் கண்காணிப்பாளர்கள் குழுத்தலைவர் பிளிக்ஸ் கடந்த 27ம் திகதி ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். ஆயுதக்கண்காணிப்பாளர் குழுவுக்கு, ஈராக் தன்னிடமுள்ள பேரழிப்பு ஆயுதங்கள் குறித்து முழுமையான தகவல்களைத் தரத் தவறிவிட்டது என்ற வகையிலேயே அறிக்கை



அமைந்திருந்தது.


பேரழிப்பு ஆயுதங்களை விற்குமப்பால் “உன்னதமான சனநாயகம்” “மனித நாகரீகம்” ஆகியவற்றின் பேரால் ஈராக் அதிபர் அகற்றப்படவேண்டும் என்பதில் அமெரிக்கா குறியாக உள்ளது. வேறுவகையில் சொல்லுவதானால், உலகின் உயர் எண்ணை வளமிக்க நாடுகளில் இரண்டாவதாகக் கருதப்படும் ஈராக்கில் அமெரிக்க சார்பு பொம்மை அரசு ஏற்படுவதையே அமெரிக்கா விரும்புகிறது. பெற்றோலியப்பொருள் அகழ்வு, உற்பத்தி, விநியோகம் என்பன பன்னாட்டு நிறுவனங்களின் கைகளிலிருப்பதே, தனது உலக மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் என்றே கருதுகிறது அமெரிக்கா. எனவேதான் அமெரிக்கக் கூட்டணியின் ஈராக்கிற்கெதிரான பெருமெடுப்பிலான போர்த் தயாரிப்புக்கள் ஈராக்கைச் சூழுகின்றன. இதுமட்டுமன்றி அமெரிக்காவின் மிக நவீன போராயுத பரிசோதனைக் களமாகவும் ஈராக் விளங்கப்போகிறது. எதிர்நோக்கும் பொருண்மிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும்



கூட தொலைப்பார்வையுடன் இம்மோதலில் இறங்குவது என்பதில் அமெரிக்கா தீவிரங் காட்டுகிறது.

ஏற்கனவேயுள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஆயுத பரிசோதனைத் தீர்மானத்திற்கும் மேல், ஈராக்கின் மீதான தனது தாக்குதலுக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அமெரிக்கா ஆதரவு தேடுகிறது. இத்தகைய தீர்மானத்திற்கு, பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகளில் பிரான்சு, ஜேர்மனி, ரஷ்யா, சீனா ஆகியவை எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. போரின் பின்னரான ஈராக்கிய புனர்நிர்மாணப் பணிகளுக்கு சர்வதேசப் பங்களிப்பு மிகத்தேவை என்பதால், இத்தகைய அங்கீகாரம் அமெரிக்காவிற்கு மிகஅவசியமாகும். பிந்திக்கிடைத்த தகவலின் பிரகாரம், அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கு இத்தாலியும், ஸ்பெயினும் தமது ஆதரவை வழங்கியுள்ளன.

இவ்வருடத்திற்கான ஐரோப்பிய ஒன்றியத் தலைமைப்பதவி, ஜேர்மனிக்கே கிடைக்கவுள்ளது. ஜேர்மனியின் எதிர்ப்பு கணிசமான செல்வாக்கை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் செலுத்த வல்லது. அமெரிக்காவின் ஐரோப்பிய படைத்தளங்களை தாக்கு



தலின் போது பாவிப்பதற்கு இடமளிக்கப்படுமா என்பது தற்போதைக்கு கேள்விக்குரியதுதான். எனவே போரிற்கான அமெரிக்க முன்னெடுப்புகளில் சிறிது தொய்வு ஏற்படவாய்ப்புண்டு.

அமெரிக்க அதிபரின் கடந்த வார உரை ஈராக் மீதான தாக்குதலை நியாயப்படுத்துவதாக அமைந்துள்ளது:-

01) ஈராக்கிற்கும் அல்கெய்தா அமைப்பிற்கும் நெருங்கிய செயற்பாட்டு ரீதியிலான உறவுண்டு.

02) ஈராக்கின் பேரழிவு ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

03) ஈராக்கில் “சனநாயகத்தை” நிலைநிறுத்த அமெரிக்கா செயற்பாடுகளில் இறங்கத் தயாராகிறது.



இம்மூன்று விடங்களும் அமெரிக்க அதிபரின் உரையில் வலியுறுத்தப்பட்டிருந்தன. அமெரிக்க அதிபரின் அதி உச்சத்தை தொட்டு நின்ற பின்வரும் கூற்று கவனிப்பிற்குரியது. இக்கூற்று ஈராக் மக்களுக்கானதாகும்.:-

“ உங்களது எதிரி உங்களை ஆளுகிறான்”

அமெரிக்க அதிபரின் கவர்ச்சிகரமான உரை அமெரிக்காவிலும், சர்வதேச ரீதியிலும் காட்டப்படும் போரெதிர்ப்பு உணர்வலைகளைத் தணிக்கும் என்பது அவரது கணிப்பாக இருக்கலாம்.

ஈராக் அதிபருக்கும், ஈராக்கில் ஆட்சியிலிருக்கும் பாத் கட்சிக்கும் உள்ள ஈராக்கிய உள்எதிர்ப்பினை அமெரிக்கா தனது இலக்கினை எட்டுவதற்கு சாதகமாக்கிக் கொள்கிறது. ஈராக்கிலிருந்து அதிகளாக வெளியேறியவர்களில் 3000 பேருக்கு ஹங்கேரியிலுள்ள மறைவிடமொன்றில் பயிற்சி தரப்படுகிறது. இவர்களுக்கு மிகக் குறுகிய இராணுவப்பயிற்சியே அளிக்கப்படுகிறது. அமெரிக்க, பிரிடிஸ் கூட்டுப்படைகள் ஈராக்கை ஊடுருவி நிலைகொள்ளும் போது, இவர்களும் இணைந்து செயற்படுவர். இப்படையணியின் முக்கிய நோக்கம், அமெரிக்காவின் நலனுக்கேற்ப ஈராக்கிய மக்களை வளைப்பதுதான், அதாவது அவர்களை “நாகரீகமூட்டி, சனநாயகப்படுத்துவது”.

இவ்வகைக் கரிசனத்தை, ஈராக்கிய மக்கள், தங்கள் மீதுள்ள அமெரிக்காவின் “உயர் அக்கறையாக” கருதுவார்களா? கேள்வி எழவே செய்கிறது. ஈராக்கின் மீதான தாக்குதலானது குறுகிய காலத்திற்குள் இலக்கினை எட்டுமா அல்லது நீடிக்குமா என்பதை எதிர்வு கூறமுடியாது. ஆனால் குறுகியகால நிகழ்ச்சிநிரலாகவே இவ் இராணுவ நடவடிக்கை அமெரிக்கக் கூட்டணியினால் வகுக்கப்பட்டிருக்கும். இப் போர் நீடிக்குமானால், - அதற்கான வலுவை சதாம் கொண்டிருந்தால் -, அமெரிக்கக் கூட்டணியின் மீதான



கண்டன அலைகள் அதிகரிக்கவே செய்யும். இப்போரின் சுமையை அமெரிக்கக் கூட்டணியினால் தாங்கமுடியாதிருக்கும் என்பது மட்டுமல்ல அனைத்துலகமுமே பொருண்மிய சரிவை எதிர் நோக்க வேண்டியிருக்கும். முக்கியமாகப் பாதிப்படையப் போவது மூன்றாம் உலக நாடுகள் தான்.

“அரசியல் பிழைத்தோருக்கு அறமே கூற்றாகும்” என்ற வகையில், வரலாறு எந்தப் பாதையைத்திறந்து வைத்திருக்கும் என்பதற்கு ஈராக் ஒரு வரலாற்று சோதனைக்களமாக உள்ளது.


## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ.இல.14/02
தன்மை: விவாகரத்து

வழக்காளி:
திருமதி.பாலச்சந்திரன் சூரியகாந்தி
மே/பா கிருஸ்ணன் ஜெயக்குமார்,
வட்டக்கச்சி, மாயவனூர்
எதிராளி:
திரு.சிதம்பரப்பிள்ளை பாலச்சந்திரன்
10ம் கட்டை, விசுவமடு.

### இடைக்காலத்தீர்வை

2002 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 03ம் திகதி தமிழீழ மாவட்ட நீதிமன்ற நீதியாளர் திரு. த. செந்தூர் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் வழக்காளி சட்டவாளரும் சமுகமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் செயல்படுத்த முடியாமையால் தினசரிப் பத்திரிகையான ஈழநாதம் பத்தரிகையில் பகிரங்க விளம்பரம் செய்தும் எதிராளியானவரோ உரித்துடையவரோ எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமையால் கீழ் கண்டவாறு இடைக்காலத் தீர்வை வழங்கப்படுகிறது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி நடைபெற்ற திருமணப்பதிவை இரத்துச் செய்து வழக்காளியும் எதிராளியும் திருமணத்திற்கு முன்னிருந்த நிலையை அடைவார்கள் என்றும் உரிமைக்கோரிக்கையின் 2ம் பந்தி நிவாரணத்துக்கு எதிராளி சமுகம் கொடுக்கும் பொழுது அதற்கான தீர்ப்பு வழங்கப்படும் என்றும் உரிமைக்கோரிக்கையின் 3ம், 4ம் பந்தியில் கோரிய நிவாரணங்களையும் வழங்கி மன்று கட்டளையிட்டு இடைக்காலத் தீர்வை வழங்கப்படுகிறது.

வரைபு: சட்டவாளர். (சி-7658) நீதியாளர்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ.இல:14/02
தன்மை:விவாகரத்து

வழக்காளி:
திருமதி.பாலச்சந்திரன் சூரியகாந்தி,
மே/பா கிருஸ்ணன் ஜெயக்குமார்,
வட்டக்கச்சி, மாயவனூர்.
எதிராளி:
திரு.சிதம்பரப்பிள்ளை பாலச்சந்திரன்
10ம் கட்டை,விசுவமடு.

### அறிவித்தல்

எதிராளிக்கு!

இத்துடன் பிரசுரிக்கப்படும் இடைக்காலத்தீர்வையில் ஏதாவது ஆட்சேபனை இருப்பின் இவ் அறிவித்தல் பிரசுரித்த 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளவும். தவறும் பட்சத்தில் குறித்த இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

“மன்றின் கட்டளைப்படி”

பதிவாளர்:
வரைபு: சட்டவாளர் தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி.

(சி-7659)

# தீ சுமந்த நிலம்




Valentine Day

# காதலின் அற்புதம்

**உலகமறிந்த எழுத்தாளரும் தத்துவவாதியுமான கலீல் ஜிப்ரான் காதல் பற்றி எழுதியதிலிருந்து.....**

******

நேற்று கோயிலின் வாசலில் நின்று வருவோர் போவோரிடம் காதலின் அற்புதங்கள் பற்றியும் நிறைகள் பற்றியும் கேட்டுக் கொண்டிருந்தேன்.

வயதாகித் தளர்ந்து வருத்தம் மூடிய முகத்தைக் கொண்ட பெரியவர் ஒருவர் சொன்னார், "முதல் மனிதன் நமக்கு விட்டுப் போன இயல்பின் வழியான பலவீனம் காதல்."

ஆரோக்கியமான இளைஞன் ஒருவன் சொன்னான், "காதல் நமதுநிகழ்காலத்தை இறந்த காலத்தின் வேர்களோடும் எதிர்காலத்து மாளிகைக் கோபுரத்தோடும் இணைக்கிறது."

பிறகு வந்தவள் வருத்தம் தோய்ந்த முகத்தோடு பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த ஒரு பெண். "நரகத்தின் குகைகளில் இருந்து வந்திருக்கும் கரு நாகங்கள் செலுத்தும் கொடிய விஷமே காதல்." என்றாள்.

"இந்த விஷம் பனித்துளியைப் போலக் குளிர்ந்திருக்கிறது. தாகத்தில் தவிப்பவன் அள்ளி அள்ளிக் குடிக்கிறான். போதை தலைக்கு மீறும் போது கைகால் இழுத்துக் கொள்ள பெரும் வலியில் இறக்கிறான்."

ரோசாப்பூக் கன்னங்களோடும் மகிழ்வின் கண்களோடும் ஓர் இளம்பெண் சொன்னாள், "காதல் வைகறையின் காதலன் ஊற்றித்தரும் மது. உறுதியான ஆன்மாக்களுக்கு உறுதி தருகிறது. நட்சத்திரங்களை நோக்கி உயர வைக் கிறது."

கறுப்பு உடையில் வந்த இரண்டு தாடிக்காரர்களைக் கேட்டேன். ஒருவர் தன் புருவங்கள் முடிச்சிடச் சொன்னார். "இளமை தோன்றி மறைந்து போகும் குருட்டு அறியாமைதான், காதல்."

இன்னொருவரோ புன்னகையோடு,"கடவுள் காண்பதை மனிதர்களும் காண வைக்கும் தெய்வீக அறிவே காதல்." என்றார்.

கைத்தடியின் நுனியில் தன் பாதையைக் காணும் குருடன் வந்தான், அவன், "காதல் பார்வையை மறைக்கும் மூடுபனி. வாழ்தலின் ரகசியத்தை ஆன்மா புரிந்து கொள்வதைத் தடுத்துத்தான் விடுகிறது. பிறகென்ன? இதயமலைகளில் ஆசைகளின் நடுங்கும் ஸ்தூல வடிவங்களைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியாதபடி செய்து விடுகிறது. நிசப்தமான பள்ளத்தாக்குகளில் அழு கையின் எதிரொலி தவிர வேறு எதையும் கேட்க முடியாதபடி செய்து விடுகிறது." என்றான்.

முழுக்கத் தளர்ந்து போன முதி யவர் ஒருவர் நடுங்கும் குரலில், "கல்ல றையின் மௌனத்தில் உடலைக் கிடத்தி வைப்பது காதல். ஆன்மாவின் அசைவற்ற நிம்மதி. நித்தியத்தின் ஆழங்கள்." என்றார்.

பெற்றோரோடு வந்த ஐந்து வயதுக் குழந்தை சிரித்துக் கொண்டே சொன்னது,



"காதல் என் தாயும் தந்தை யுமே. அது என்ன என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும்."

இப்படியாக ஒவ்வொருவரும் தத்தமது நம்பிக்கைகளையும் விரக்திக ளையும் மேலேற்றிக் காதலை விவரிக்க காதல் புரிந்து கொள்ள முடியாத ஒரு ரகசியமாகவே இருந்து விட்டது.

ஆனாலோ

பருவங்களின் உதவியின்றி முளைத்து மலர்விடும் ஒரே விதை காதல்தான்.

வருத்தம் தோய்ந்த தெளிவு படுத்துகிற பிரிவுக்குப் பின்னரே

கசப்பான பொறுமைக்குப் பின் னரே தவிதவிக்கும் முயற்சிகளுக்கு பின்னரே காதலைப் பெறுகிறோம்.

மனைவியின் இதயத்தைப் பகலில் உழைத்தும் இரவில் காவலிருந்தும் பெற்றுக் கொள்ள நினைக்கும் கணவன் திடீரென ஒரு நாள் அவள் தன் அந்தரங்கமான ரகசியங்களையும் எழுச்சி மிகுகாதலையும் இன்னொருவனோடு பகிர்ந்து கொண்டு அதில் இன்பம் காண் கிறாள் என்று தெரிந்து கொள் ளும் போது எப்படித் துடித்துப் போவான் தெரியுமா?

சாக்கிரதையில்லாத இளமையின் முடிவில் திடீரென விழித்துக் கொள்ளும் பெண் தன் கணவன் தன் செல்வத்தின் சுகபோகங்கள் அனைத்தையும் அவளுக்குத் தந்தும் அவள் இத யத்தை சிரஞ்சீவிக் காதலைக் கொண்டு நிரப்ப வில்லை என்று தெரிந்து கொண் டால் எப்படித் துடித்துப் போவாள் தெரியுமா?

அளவான காதல் காதலியைச் சொந்தமாக்கிக் கொள்ள விரும்புகிறது. ஆனால் யார் தன்னை ஒரு மாபெரும் சமுத்திரமாகக் காண்கிறானோ அவன் தன் கரைகளையே நாடுகின்றான்.

காதல் தன் சீடர்களாகத் தேர்ந் தெடுக்காதவர் அதன் அழைப்புக்களைக் கேட்க முடியாது.

நரகம் சித்திரவதையில் இல்லை. நரகம் வெறுமையாகிப் போன இதயத்தில் தான் இருக்கிறது.

❖❖❖❖❖

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - மன்னார்

வழ/ இல : 107/2002
தன்மை: மணநீக்கம்
சுரேஸ்குமார் – மல்லிகா,
4ம் கட்டை,பூநகரி.
– வழக்காளி

எதிர்
கணேசமூர்த்தி – சுரேஸ்குமார்,
16ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
– எதிராளி

**பகிரங்க அறிவித்தல்.**

மேற்படி எதிராளிக்கு!

இவ்வழக்கின் வழக்காளியானவர், தனக்கும் உமக்கும் இடையிலான திருமணப் பதிவை இரத்துச் செய்து கொள்வதற்காக வன்மவுறவறுப்பை காரணம் காட்டி உமக்கு எதிராக இம்மன்றில் மண நீக்கவழக்கை 16.11.2002 அன்று தாக்கல் செய்த போது மன்று உமக்கான அழைப்பாணையை சேர்ப்பிக்க முயன்ற போது நீர் மேற்படி முகவரியில் தற்போது இல்லை என முல்லை மாவட்ட நீதிமன்ற முறைநிறைவேற்றுநர் அறிக்கையின் மூலம் [illegible]ந்ததால் உமக்கு இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது. எனவே நீர் [illegible]யாக அல்லது உமது நிலையில் சட்டப்படி அக்கறையுடையோர் ஊடாக இவ் அறிவித்தல் வெளியாகி 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி இவ்வழக்குத் தொடர்பில் கோரிக்கைகள், ஆட்சேபனைகள் இருப்பின் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறீர். தவறின் மன்று வழக்காளியின் உரிமைக் கோரிக்கையை ஒரு முகமாக விளங்கி தொடர் சட்ட நடவடிக்கை ஊடாக தீர்ப்பு வழங்கும் என இவ் அறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

மன்றின் கட்டளைப்படி

வரைவு:
செல்வி .சு. தயாநிதி,
வழக்காளி சட்டவாளர்.
வன்னேரிக்குளம், கிளிநொச்சி.

பொ. சுப்பிரமணியம், பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
மன்னார்.

(2893)

SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY

SONY
FD Trinitron
WEGA

சமதிரை (Flat TV)
தொலைக்காட்சிப்பெட்டி




சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்
"இப்பத்திரம் இல்லாமல் உங்கள் சொனியை வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டாம்"

சீடில்ஸ்

ஏக விநியோகஸ்தர் கிங் பரட்ஸ்
இல.20, பிரதான வீதி,
வவுனியா.
T.P: 23123

(சி-7275)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் குணாளினி/இளவேணி**

[சோதியா படையணி]
மார்க்கண்டு -திருமகள்
தமோதரம் பிள்ளை வீதி,சாவகச்சேரி

தாயின் மடியில்
1976–09–13

தாயக மண்ணில்
2001–02–18

"மறமங்கையே குணாளினி
மறவேங்கை முறம் கொண்டு விரட்டிய
மங்கையர் திலகமே! சாவகச்சேரி வாழ்
மான மங்கையே மனங்கள் மறக்காதம்மா உனை"

இதே நாளில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

-குடும்பத்தினர்-

[2764]

# 16ம் ஆண்டு நினைவுகளுடன்...



**லெப்.கேணல் பொன்னம்மான்**
**[யோகரத்தினம் குகன்]**

தாயகக் கனவை நெஞ்சிலே சுமந்து
விடுதலை நெருப்பை விழிகளில் ஏந்தி
வீர வரலாற்றுக் கரிகாலன் வழி சேர்ந்த
லெப். கேணல் பொன்னம்மான் அவர்கள்
களத்தில் பெரும் சுட்டியாய்
அண்ணன் வழி நடந்த வீரன் – அவன்
பாசத்துடன் பழகும் தோழன்
தங்கத் தலைவன் காலமதில் –மகளிர்
அணிக்கு கிடைத்த பெறுபேற்றை
கட்டிக்காத்து வளமுற வழி நடந்த
முதல் மகளிர் அணி பாசறைக்கு அத்திவாரம் இட்ட பயிற்சி ஆசான்
லெப். கேணல் பொன்னம்மான் – அவர்கள்
வெடிமருந்துத் துறையிலே
விருப்புடனே செயற்பட்ட
விடுதலை வேங்கை
தேசத்தை நேசித்த தமிழ் மறவன்.
14–02–1987 அன்று
தமிழ் மண்ணுக்காய் விதையாக வீழ்ந்தான்
வசந்தத்தை வரவேற்று
விரைந்த காவிய விருட்சம்
காற்றோடு கலந்து கொண்டான்
இவருடன் மேஜர் கேடில்ஸ்சு
கப்டன் வாசு, லெப்டினன்ட் சித்தாத்தன்
2ம் லெப் பரன், கவர், யோகேசு
தேவன்,குமணன்,அக்பர்
விழி மூடிக் கொண்டார்கள்.
விடுதலையின் பாதையிலே – இவர்களுடன்
வே.சிவனேந்திரனும் தன் பெயரை பதித்துக்கொண்டான்.
விடுதலையை வீச்சாக்கி
வீரத்துடன் சுழன்ற புயல்களே!
வீரியம் கொண்ட நெருப்பின்
வரிகளே! உங்கள்
16ம் ஆண்டு நினைவுகளை
நெஞ்சிலே சுமந்து.... தொடருமது உறுதியான
வெஞ்சமர்களிலே உங்கள் புகழ்பாடி
விரைவாக்குவோம் விடிவான தேசத்தை..

லெப். கேணல் பொன்னம்மான்
கண்ணிவெடிப்பிரிவு.

[2732]

# நேர்நோக்கு

## சமாதானத்திற்கு விழுந்த பலத்த அடி...

சிறீலங்கா கடற்படையின் அடாவடித்தனத்தால் தமிழ்மக்கள் தமது மூன்று போராளிகளை இழந்த துயரச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்திருக்கிறது. அம் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தி தமிழீழமக்கள் ஒருநாள் துக்கம்கடைப்பிடித்ததுடன் தொடர்ந்து வீரவணக்க நிகழ்வுகளையும் நடத்தி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அதேவேளை இப்போராளிகளின் வீரச்சாவுக்குக்காரணமாயிருந்த சிறிலங்கா கடற்படையின் அடாவடித்தனத்தையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பொறுப்பற்ற செயலையும்கண்டித்து வருகின்றனர். இச்சம்பவமானது தமிழ் மக்கள்மத்தியில் ஏற்படுத்தியுள்ள சோகத்தையும், கொதிப்பையும் இவை எடுத்துக்காட்டுகின்றன.

சிறிலங்காப்படையினரின் நடவடிக்கைகள் போர்ஓய்வை அவர்கள் விருப்பத்துடன் கடைப்பிடிப்பது போன்ற உணர்வை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தவில்லை. இன்றைய சமாதான முயற்சிகளின் அடித்தளமாக விளங்கும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்துவதில் அவர்கள் ஆரம்ப முதலே முட்டுக்கட்டையாக இருந்து வந்திருக்கின்றனர் என்பது வெளிப்படையான விடயமாகும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஒவ்வொரு அலகையும் நிறைவேற்றுவதற்குப் படையினரின் இம் மனோநிலை காரணமாகப் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியே இருந்தது. அதிலும் குறிப்பாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் - குறிப்பாக தீவகத்தில் - போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைக்கு இட புதிய பல நிபந்தனைகள் கடற்படையால் விதிக்கப்பட்டு பெரும் இழுபறிநிலை ஏற்பட்டது. அத்துடன் தொடர்ந்தும் அவர்கள் மக்களுக்கு எதிராக- மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு மீள்வதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர். நெடுந்தீவில் ஒப்பந்தத்துக்கு முரணாக புதிய கடற்படை முகாம் ஒன்றை அமைத்ததுடன், அங்குள்ள மக்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களை அச்சுறுத்தும் வகையில் ஈ.பி.டி.பி தேசவிரோதக் குழுவினரை நிலைநிறுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்கள் தமது வருமானத்தைப் பெறத்தடையாக மீன்பிடிக்குப் பல முட்டுக்கட்டைகளையும் நிபந்தனைகளையும் போட்டு வருகின்றனர்.

அது மட்டுமல்லாது விடுதலைப் புலிகளின் கடற்பயணம் தொடர்பாக நீண்ட பெரும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. பல நிபந்தனைகள் கடற்படையினரால் போடப்பட்டன. அத்துடன் விடுதலைப்புலிகளுக்கு ஆத்திர மூட்டும் பல முயற்சிகளை கடற்படையினர் மேற்கொண்ட போதும் புலிகள் பொறுமைகாத்து அமைதி முயற்சியில் தாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இவ்வாறிருந்தும் கூட கடற்படையினர் தமிழ் மக்களுடனும் விடுதலைப் புலிகளுடனும் இணக்கமான போக்கைக் கடைப்பிடிக்கத் தயாராக இல்லாதது மட்டுமல்ல மேலும் மேலும் மோதல் நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் குறித்து தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையைச் சிதைவடையச் செய்யும் நிலையும் நெடுந்தீவுக் கடற்பரப்பில் நடந்தேறிய சம்பவம் ஏற்படுத்தியிருக்கிறது. கண்காணிப்புக் குழுவினரில் நம்பிக்கைவைத்து கடற்புலிகள் தமது படகைச் சோதனையிட அனுமதித்து கண்காணிப்புக்குழுவினர் தமது கடமையைச் செய்ய அவர்கள் ஒத்துழைத்த போதிலும், நீதியான முறையில் நடந்து அம் மூன்று போராளிகளையும் விடுவிக்க கண்காணிப்புக் குழுவினரால் முடியவில்லை.

அதேவேளை இச் சம்பவம்குறித்து "புலிகள் ஆயுதக்கடத்தலை மேற்கொள்கின்றனர் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறிவருகின்றனர்" என்ற சமாதானத்துக்கு விரோதமான சக்திகளின் பிரச்சாரத்துக்கு வலுச்சேர்க்கும் விதத்திலான அறிக்கையொன்றை அவர்கள் வெளியிட்டமையானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அதாவது நீண்டகால யுத்தமொன்றுக்கு சமாதான வழி மூலமான தீர்வுகாணும் முயற்சியின் முக்கிய அங்கமாக இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் சரிவர நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொறுப்பிலுள்ள இவர்கள், புலிகளின் யுத்தநிறுத்த மீறல்குறித்த சமாதான விரோதிகளின் பிரச்சாரத்துக்கு வலுச்சேர்க்க முடிந்துள்ளதேயொழிய, கடற்புலிகளை வீரச்சாவடையும் முடிவுக்கு வரத்தூண்டிய கடற்படையினரின் அடாவடித்தனமான நடவடிக்கையை உறுதி செய்ய முடியாமற் போனமை மக்கள் மத்தியில் பெரும்விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

மொத்தத்தில் இச் சம்பவமானது சமாதான முயற்சிகள் குறித்து தமிழ்மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்குப் பலத்த அடியை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறம், "மக்களைப் பாதுகாக்கும்" கடமையிலுள்ள படையினர், சிங்கள மக்களின் விருப்பத்துக்கு மாறாக சமாதான முயற்சிகளுக்குக் குந்தகமான செயற்பாடுகளில் இடையறாது செயற்பட்டு வருகின்றமையையும் இச்சம்பவம் வெளிப்படுத்தியிருக்கிறது.

வேலவன்

2ம் பக்கத் தொடர்ச்சி..

அரசாங்கத்தின் அறிவிப்புக்கள் இவற்றிற்கு ஊக்கியாவே தொழிற்பட்டன.

இந்த வன்முறைத்திரட்சிக்கு தடுப்பிடாதவிடத்தில் நிகழ்ந்ததுவே இந்த நெடுந்தீவு , மானிப்பாய் சம்பவங்கள்.

தனிப்பட்ட இராணுவத்தினரின் அத்துமீறல்கள் யுத்தநிறுத்தத்தில் தவிர்க்கவியலாதவையாக இருக்கலாம். எனவே அவை சாதாரணமானவையாகவும் இயல்பானவையாகவும் எடுத்துக்கொள்ளப்படலாம்.

ஆனால் இராணுவ வன்முறை சாதாரணமானவையல்ல. பாரதூரமானவை. உள்நோக்கம் கொணடவை.

எனவே அவை பொறுத்துக் கொள்ள முடியாதவை சமாதானத்தைத் தகர்க்கும் வலுக்கொண்டவை.

திம்புப் பேச்சின் போதும் வவுனியா இராணுவ முகாமிலிருந்து யுத்தநிறுத்தத்தை மீறி வெளிவந்த இராணுவத்தினர் இருநூறு பொது மக்களைப் படுகொலை செய்தது. அதுவே பேச்சு முறிந்துபோக காரணமுமாயிற்று.

காரணம் அதுவும் ஒரு அத்துமீறல் அல்ல. உள்நோக்கம் கொண்ட இராணுவ வன்முறையே.

ஆனால் இப்பொழுது ஒப்பீட்டளவில் சமாதானத்தின் புறச்சூழல் வலுவானது, பலம் வாய்ந்தது.

அதன் நிமித்தமாக தத்துக்களை தாண்டும் வலிமை இப்பொழுதுள்ள சமாதானத்திற்கு ஒப்பீட்டளவில் அதிகம்தான்.

இதன் காரணமாகவே வந்த தத்துக்கள் அபாயகரமான கட்டத்திலிருந்து தாண்டப்பட்டிருக்கலாம்.

. அதற்காக சமாதானத்தின் அடித்தளம் சிரஞ்சீவித்தன்மையாகி விட்டதென்ற அர்த்தமாகிவிடாது.

இராணுவ வன்மம் திரளத்திரள அது சமாதானத்தின் அத்திவாரமான யுத்தநிறுத்தத்தை ஈடாட்டுகிறது.

புலிகளின் சகிப்பில் சுவர்கள் விழாதிருக்கலாம். ஆனால் பொறுமை திரளத்திரள அதன் திரட்சியே பொறுமையைத் தகர்த்துவிட வல்லதாகிறது.

இப்படிப் பார்க்கும்போது சமாதானத்திற்கு பல்லக்குச் செதுக்கப்படுவதற்குப் பிரயோகிக்கும் சக்தியை விடவும் சவப்பெட்டி செதுக்க பிரயோக்கிப்படும் சக்தியே வலுவானதுபோல் தோன்றுகிறது.

இயல்புச் சூழலை உருவாக்க முடியாமல் திண்டாடும்போது யுத்த நிறுத்தமே ஈடாட்டம் காண்பது சமாதானத்திற்கு ஒரு துர்க்குறியே.

தடுப்பதற்கு இருக்கும் மார்க்கங்கள் மிக அரிதானவையே. ஒன்று சிங்கள மக்கள் இதைப் புரிந்துகொண்டு திரட்சியான அரசியல் சக்தியை பிரயோகிக்க வேண்டும்.

மற்றையது மூன்றாம் தரப்பாக சர்வதேச சமூகம் பொருத்தமான அரசியல்பலத்தை இதற்காகப் பிரயோகிக் வேண்டும்.

இவற்றைப் பெற்றுக்கொள் ளவும் பயன்படுத்தவும் அரசாங்கம் திட்டவட்டமான தீர்க்கமான துணிகரமான செயலில் இறங்க வேண்டும்.

அல்லாது விடின் இத்தீவின் வீதிகளால் சமாதானம் சவஊர் வலம் போவதைப்பார்த்திருக்க வேண்டிவரும்.


## 16 ஆம்ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 23 - 12 - 1956



வீரச்சாவு 14 - 02 - 1987

### லெப். கேணல் பொன்னம்மான்

**[யோகரத்தினம் செகதீசுவரி குகன்]**

நாவற்குழிப் பாசறையைத் தகர்க்கும் முயற்சியின்போது வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த போராளிகள் பொன்னம்மான், மேஜர் கேடில்சு, கப்டன் வாசு, லெப். சித்தார்த்தன், 2ஆம் லெப். பரன், கவர், யோகேசு, தேவன், குமணன், அக்பர் ஆகியோரையும் வே.சிவனேந்திரனையும் மக்களையும் நினைவு கூருகின்றோம்.

(2951) குடும்பத்தினர்.


## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 06.



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 06

..................................................

..................................................

..................................................

..................................................

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 05



பரிசுக்குரியவர்
க. பிரியா
ஊற்றங்கரைவீதி,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.

### பரிசுக்குரிய வரிகள்

கணனி முன் அமர்ந்திருக்கும் காலமதில்- பிறர்
காற்செருப்பிற்கு முன் அமர்ந்திருக்கும் நிலை வந்ததோ
இளம் தளிரே கலங்காதே உறுதியுடன் இரு
ஈழமதில் நாளைய வெற்றி உன்னுடையதே.

பள்ளிசென்று சிந்தனை வளர்க்கும் பருவப்பெண்
பாதரிகளின் வன்செயலால் சொந்தம், சொத்திழந்து
பாதையிலே குந்தியிருந்து பாதணிகள் கூறும்கதையை - உன்
வாழ்க்கையோடு ஒன்றிணைத்து உழைக்கின்றாயா

திருமதிசி. வரதரூபன்,
வட்டக்கச்சி.

பாதகர் விதைத்த மிதி வெடியில்.....உன்
பாதம் பறந்தனவோ......! - ஆதலினால்
பாலகனின் பசி போக்கப்-பாதணிப்!
பாதுகாப்பு நிலையம் வைத்துள்ளாயோ-நங்காய்.

பிரதீபா லோகநாதன்
கிளிநொச்சி.

வெந்து நொந்த உள்ளங்கள்
வேதனையை சுமந்து கொண்டு
விடியாத வாழ்வோடு மீண்டும்- இந்த
ஜீவன்களின் ஆசைகள் நிறைவேறுமா?

த. கீர்த்தனன்

தெருவோரத்திண்ணையில்-அவனது
காலடித் தடங்களை எதிர்பார்த்து- இரு
வேறு உள்ளங்கள். ஆனால்-அவனோ
செம்மணியில் சிதைவுண்டு போனான்-இனி இவர்கள்?

இ.கண்ணன்
கி.அ.வங்கி
புதுக்குடியிருப்பு

இந்த போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக்கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

## வாசகர்களுக்கு...

ஈழநாதம் மக்கள் தினசரி 19-02- 2003 அன்று பதினான்காம் ஆண்டில் காலடியெடுத்து வைப்பதையிட்டு "ஆண்டுச் சிறப்பிதழ்" ஒன்றை வெளியிடுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதேவேளை 21-02-03 அன்று வெளிவரவிருந்த வெள்ளிநாதம் வெளிவராது. அடுத்த வாரம் வெளிவரும் என்பதையும் அறியத் ருகின்றோம்.

ஆண்டு மலரினை விற்பனையாளர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.



அமெரிக்க கடற்படை சிப்பாய் ஒருவர் பயிற்சிக்கு புறப்படுவதற்கு முன்பு தனது முக கவசத்தைச் சரிசெய்து கொள்வதை காணலாம். வளை குடாப் பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருக்கும் யு.எஸ்.எஸ் ஒஸ்ரின் கப்பலுக் குரியவரே இவர்



இப்படத்திற்கும் கீழே உள்ள படங்களிற்கும் ஒரு தொடர்பு இருப்பது போல தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. கசகஸ்தானில் அண்மையில் இடம்பெற்ற பாரம்பரிய வேட்டையாடும் போட்டி ஒன்றில் ஒரு முயல் குட்டியை தாழப்பறந்து தூக்க முயற்சிக்கும் ஒரு தங்க கழுகினை காண்கிறீர்கள்.



ஏ.ஐ.எம்–9 பக்கச் சிறகு ஏவுகணைகளை பரிசோதிக்கும் விமானப் படைப்பிரிவு பரிசோதகர் ஒருவரை மேலே காணலாம். யு.எஸ்.எஸ் கென்சலேசன் என்னும் விமானம் தாங்கிக் கப்பலில் தரித்து நிற்கும் எவ்–18 ரக சண்டை விமானத்தையே இவர் பரிசோதிக்கிறார்.




பணிக்கு தயாராகும் அமெரிக்க வீராங்கனைகளை கைலாகு கொடுத்து அனுப்பி வைக்கும் அமெரிக்க அதிபர் புஷ்.



சீ.எச் – 46 ஈ உலங்கு வானூர்தி ஒன்று இராணுவ உபகரணங்களை காவி யு.எஸ்.எஸ் ரெயினர் என்னும் வேக விநியோகப் படகுக்கு மாற்றுகிறது.







மேலே யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி கப்பலில் இருந்து மேலெழும் கடற்படை எவ்–14டி விமானம். இடது புறம் 25 mm கனொன் துப்பாக்கியுடன் இலக்கை அவதானிக்கும் ஈரூடக தாக்குதல் கப்பலான யு.எஸ்.எஸ் நாசாவின் சிப்பாய் ஒருவர். வலது கடல் அணிவகுப்பில் ஈடுபடும் அமெரிக்க கடற்படைக் கப்பல் ஒஸ்ரின், ரோட்டுகா கப்பல்கள்

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.